ஓம்.

பரப்பிரம்மணே நமஃ.

"ஏகம் சத்விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

வாலியம் I. } 1904௵ ஜனவரி௴ { புத்தகம் IX.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
11 APR 1904
MADRAS.

## மனனமாலை.

சூதானமாயையோரைத் துதிக்கையாலெடுத்துமேலாம்
ஆதாரமானவந்த வருளினிலிருக்கவைக்கும்
தாதாவாய்விருத்தவெற்பிற் றங்கியேபிரகாசிக்கும்
பாதாளத்தானைபாதம் பணிந்துபோற்றிடுதல்செய்வாம்.

விளங்கியிடுமிவ்வுலகெல்லா மித்தைதவடிவேயென்பதுவும், விளங்கியெங்குந்தற்சொரூபம் விமலவடிவேயென்பதுவும், விளங்கிலருத்தமொன்றேயாம் வேறாய்க்காணுமஃதகற்றி, விளங்குமொளியாயேகாண்கில் விளங்குமருத்தமொன்றாயே.

தனதுசங்கற்பந்தனிலே சகங்களாகிவிளங்கியிடும், தனதுசங்கற்பந்தனிலே சகம்போயொடுங்குமதனாலே, தனதுவடிவே சகங்களெல்லாந் தன்னைவிட வேறிலைதங்கம், தனதுவடிவைவிடப்பணிகடான் வேறாகிவிளங்கிடுமோ.

காமத்தாலிந்திரன் கலக்கமெய்தினன்
காமத்தாலிராவணன் கருத்தழிந்தனன்
காமத்தாற்கீசகன் கவலையுற்றனன்
காமத்தாலிறந்தவர் கணக்கிலார்களே.

கோபத்தாற்கௌசிகன் றவத்தைக்கொட்டினன்
கோபத்தானகுடனுங் கோலமாற்றினன்
கோபத்தாலிந்திரன் குலிசம்போக்கினன்
கோபத்தாலிறந்தவர் கோடிகோடியே.

ஆசையாற்சந்திர னங்கந்தேய்ந்தனன்
ஆசையாற்சவுபரி யறிவைநீங்கினன்
ஆசையானராசுர னவிபோக்கினன்
ஆசையால்வாலியு மழிந்துபோயினன்.

மக்களுமனையுநீத்து மாதராராசைநீத்துச்
சொர்க்கமேலாசைநீத்துச் சுத்தனாய்ப்பற்றொன்றின்றிக்
கற்கவேண்டியதுநீத்துக் கருதிருவினையுநீத்து
நிற்குணசிவர்தானாகி நிற்பதுஞானநிட்டை.

ஐம்புலன்வழியோடி மானிடரெலாமழிவார்
ஐம்புலன்வழித்தாவிமே லமரருமலைவார்
ஐம்புலன்வழியடைத்தவன் யோகியேயன்றி
ஐம்புலன்வழியடைத்தவ ருலகினில்யாரே.

அறிவிலறிவாயகண்டிதமாயனந்தானந்தமாகிச், செறியும்பரமசிவந்தன்னைத்தன் னுட்கண்டுதியானித்து, கறவையருந்தப் பால்சுரக்குங் காலமேனுங் கடைப்பிடிப்போர், பிறவிக்கடலைக் கடந்தோர்க ளவரேயுலகிற் பெரியோரே.

நிறையறிவாயிருந்துநின்மலன் றன்னைத்தேடி, மறைமுதனூலாராய்ந்தும் பின்னருமயங்குந்தன்மை, யிறைவனேயெனக்குநாக்குண்டில்லையோவென் றுகேட்க, வறைவதுநாக்கேயென்ன வகந்தெளியானைப்போலும்.

ஊசலாடுளமுமின்றி யுருவருவுபயமின்றிக்
கோசரவகோசரங்கள் குறிகுணபேதமின்றிப்
பாசசாலங்கடந்து பராபரைக்கப்பானின்ற
வீசனையறிந்தஞானிக் கினிப்பிறப்பில்லையன்றே.

ஈசனிலை யாவியிலை யீசனடி யாரில்லை
மாசகலா மாயா மகற்கு.

ஞானமிலைப் பத்தியிலை நல்லார்கண் ணட்புமிலை
மானமிலை மாயா மகற்கு.

சீவனத்தாற் சீவனெனல் சீவமிறந்தா லிந்தச்
சீவனே யந்தச் சிவம்.

ஊனை யொதுக்கி யுணர்வாக்கி விட்டபினர்
நானே பிரமமென நாடு.

சித்திரத்தை யொத்துச சிவோகமெனச் சிந்தித்தா
லத்தனுரு நீயாவை யால்.

ஆணல்லன்பெண்ணல்ல னல்லாவலியுமல்லன்
காணலுமாகானனுளல்ல னில்லையல்லன்
பேணுங்காற்பேணுமுருவாகு மல்லனுமாங்
கோணைபெரிதுடைத்தெம் பெம்மானைக்கூறுதலே.

நாதனைஞாலமும்வானமுமேத்து நறுந்துழாய்ப்
போதனைப்பொன்னெடுஞ் சக்கரத்தெந்தைபிரான்றன்
பாதம்பணியவல்லாரைப் பணியுமவர்கண்டீர் [னைப்
ஓதும்பிறப்பிடைதோ றெம்மையாளுடையார்களே.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

## கர்மயோகம்.

கர்மம் என்னும்பதத்திற்கு கிரியை அல்லது வேலையென்று அர்த்தம். யோகம், என்றால் சுகதுக்கங்களை சமமாகவெண்ணி யனுபவித்தல். ஆகவே கர்மயோகமென்றால் சுகதுக்கங்களையும் இலாபநஷ்டங்களையும் சத்துருமித்திரர்களையும் சமமாகவெண்ணி கர்மத்தைச்செய்தல் என்று அர்த்தமாகிறது, ஒருஜென்மத்தில் மனிதன் அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்குக் காரணமாய் பூர்வஜென்மத்தில்செய்த தர்மங்களையும் கர்மமென்று சிலர் கூறுவதுண்டு. பூர்வஜென்மாந்திர சம்பந்தமாய் அடுத்த ஜென்மத்தில் அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்கும் கர்மமென்று பெயருண்டு. மனிதர்களில் வர்ணாசிரமபேதங்களுண்டாகி இன்னவருணத்தார் இன்னகர்மம் அல்லது ஆசாரத்தை யனுஷ்டிக்கவேண்டுமென்றும், அக்கர்மங்களைப் புரிவதால் இன்னபலன்களை யனுபவிக்கலாமென்றுங் கூறுவது கர்மமே. சர்வத்திற்கும் ஆதாரமான வேதத்தினுடைய கர்மகாண்டத்தில் அநேக கர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளையறிந்த மகரிஷிகள் அனேகஸ்மிருதிகளைச் செய்திருக்கிறார்கள். அந்த ஸ்மிருதிகளில் முக்கியமாய் இக்கலியுகத்தில் நடக்கும் தர்மங்களையும், மனிதன்செய்யவேண்டிய கர்மங்களையும் கூறுவது பாராசரஸ்மிருதிதான். மனிதன் பிறந்ததுமுதல் இறக்கும்வரைக்கும் செய்யவேண்டிய கர்மங்கள் அளவற்றன. கர்மங்களும் வர்ணாசிரமங்களும் தக்கவாறு இருக்கின்றன. மனிதர்களுடைய குணத்திற்கும் அவர்கள்செய்யுந் தொழிலுக்கும் தகுந்தமாதிரியாகவே ஆதியில் பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ஜாதிபேதங்களுண்டாயினவென்று பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் கூறியிருக்கிறார். பிறகு பிரம்மசரியம், கிரகஸ்தாசிரமம், வானப்பிரஸ்தம், ஸந்நியாஸம் என்னும் நான்கு ஆசிரமங்களும், அவ்வாசிரமங்களில் அனுஷ்டிக்கவேண்டியகர்மங்களும் உண்டாயின. ஜாதககர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், வித்தியாரம்பம், உபநயனம் வரைக்கும் ஒருவனுக்குத் தாய்தந்தையர்கள்செய்யுங் கர்மங்கள். உபநயனம் முடிந்து பிரம்மசாரியாகி தண்டம், கமண்டலம், தர்ப்பமுடி, மௌஞ்சி, அரைஞாண் இவைகளைத்தரித்து, பிக்ஷான்னம்புசித்தல், வேதாத்தியயனம்செய்தல், குருவின்வீட்டில்வசித்தல், குருவுக்கு சிசுருஷைசெய்தல், உபதேசம்பெறல் முதலான விரதங்களை யனுஷ்டித்துவரவேண்டும். குருவினிடத்து வித்தைகற்று உபதேசம்பெற்றுக்கொண்டபிறகு, குருதக்ஷணைகொடுத்து குருவின் அனுமதிபெற்று குலாசாரத்திற்கடுத்த பெண்ணை விவாகஞ்செய்துகொண்டு கிரகஸ்தாசிரமத்தை யடைந்து நித்திய நைமித்திககர்மங்களை சாஸ்திரயுக்தமாய்ச் செய்துவரவேண்டும். இவ்விதமாக சிலவருஷங்கள் கழிந்தபின்குடும்பவியாபாரத்தில் வைராக்கியமடைந்து கிரகஸ்தாசிரயத்தைவிட்டுநீங்கி ஜடையைத்தரித்து மரவுரி மான்தோல் இவைகளையுடுத்து, கிழங்கு பழம் முதலியவைகளைப்புசித்து தானொன்றையும் யாசியாமல் எப்போதும் கொடுப்பவனாகி, தேவ ரிஷி பிதிர்மனுஷியர்களை ஆராதிப்பதாகிய பஞ்சமகாயக்கியங்களைச்செய்துகொண்டு வானப்பிரஸ்தனாகி யிருக்கவேண்டும். அதன்பிறகு சகல பற்றுக்களையுமொழித்து, காஷாயம், தண்டம், கமண்டலம் இவைகளைத்தரித்து ஏகாந்தமாயிருத்தலை யினிதாகக்கொண்டு சன்னியாஸியாகி சுகதுக்கங்களில்வீழாமல் நடுவுநிலைமைபெற்று, அந்தக்கரண புறக்கரணங்களை யடக்குதல், லௌகிகவிஷயங்களில் பற்றில்லாமை, மனக்கலக்கமற்றிருக்கை, பொறுமை, தயைமுதலிய உத்தமகுணங்களைவகித்து, பலனை உத்தேசிக்காமல் கர்மஞ்செய்தல், பகவானைத்தியானித்தல், ஞானாராய்ச்சிசெயல், பிக்ஷையெடுத்துண்ணல் முதலான தர்மங்களை மேற்கொண்டொழுகவேண்டும். இவ்விதமாக நான்கு ஆசிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆசிரமத்திலுள்ள ஒழுக்கங்களை சிறிதேனும் வழுவாமல் நடத்தினால் அதிகசுகிர்தமுண்டு.

அனேக வருஷங்களுக்குமுன் இளம்பிராயமுள்ள ஓர்சன்னியாசி காட்டில் தபசுசெய்துக்கொண்டிருந்தார். இருபதுவருஷகாலம் கஷ்டப்பட்டு தபசுசெய்தபின் ஒருநாள் ஓர் மரத்தின்கீழ் உட்கார்ந்து தபசிலிருக்கும்பொழுது அவர்சிரசில் மரத்தின் இலைகள்விழுந்தன. இதற்கென்னகாரணமென்று கோபத்துடன் மேலேபார்க்கும்போது, இலைகளையுதிர்த்த கொக்கு பறந்துகொண்டிருந்தது. சிறிதுநேரத்திற்கெல்லாம் பறந்துகொண்டிருந்த பக்ஷியானது தொப்பென்று பூமியில்விழுந்து உயிரைவிட்டது. இதைக்கண்ட சன்னியாசி சந்தோஷமடைந்தார். இவ்வளவுசக்தி நமக்குண்டாயிற்றென்று மனமகிழ்ந்து ஒருவிதமான கர்வத்தையுமடைந்தார். சிலநாள்சென்றபின் இந்த பால்யசன்னியாஸி ஒரு கிராமத்தில் வீடுகள்தோறும் பிக்ஷையெடுத்து வருகையில் ஒருவீட்டிற்கெதிரில்நின்று அம்மா பிக்ஷைபோடு, என்றுகேட்டார். அதற்குப்பதிலாக ஐயா கொஞ்சம் பொறுங்கள் என்றசத்தம் உள்ளேயிருந்து புறப்பட்டது. அப்போது சன்னியாசி நினைத்துக்கொள்ளுகிறார் ஐயோ! இந்ததுஷ்டப்பெண் நம்முடைய மகத்துவத்தைத்தெரிந்துகொள்ளவில்லையே நம்மைகாக்கவைத்தால் இவள் அநியாயமாய்உயிரைத்துறப்பாளே என்று

எண்ணிக்கொண்டார். உடனே உள்ளேயிருந்த உத்தமி "ஐயா என்னையும் கொக்கென்று நினைத்தீரோ" என்றாள். சன்னியாசிக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. சற்றுநாழிகைக்கெல்லாம் அப்பதிவிரதாசிரோன்மணி பிக்ஷையெடுத்துக்கொண்டு வெளியேவந்தாள். அப்போது சன்னியாசி அவளைநமஸ்காரஞ்செய்து அம்மா நான்நினைத்தது உங்களுக்கு எப்படித்தெரிந்ததுஎன்றார். அவள் உன்னுடைய யோகத்தை நான் அறியமாட்டேன். எனக்கு யோகாப்பியாசம் இல்லை. தபசுமறியேன். காட்டில்போயறியேன். நான் சாதாரணமாய் இல்லறத்தைச்சேர்ந்தஸ்திரீ, என்னுடைய பரமதயாளுவான பர்த்தா தேகஅசௌக்கியமாயிருக்கிறார். அவருக்கு சிஸ்ருஷைசெய்து அமுதுபடைத்துக்கொண்டிருந்தேன். அது என்முக்கியகடமை, அதைமுடித்தபின் உனக்கு பிக்ஷைகொண்டுவந்தேன். நான் கலியாணமாகாத கன்னிகையாயிருந்தகாலத்தும் என்கர்மத்தையனுஷ்டித்தேன். இன்னும் ஆயுள்முழுவதும் நான் செய்யவேண்டிய கர்மத்தைமட்டும் யாதொரு குறைவின்றிச் செய்துவருகிறேன். இந்த யோகத்தைத்தான் நான்செய்துவருகிறேன். இதனால் எனக்கு ஞானமுண்டாயிற்று. ஆகவே பிறர்நினைக்கும்விஷயங்களை அறிய சக்தி எனக்குண்டாயிற்று." என்று கூறினாள். இதைக் கேட்ட சன்னியாசி அம்மா கர்மயோகத்தைப்பற்றி இன்னும் எனக்கு அதிகதெளிவாய்ச் சொல்லவேண்டும். என, அவள் அப்பா மதுராபுரியில் இறைச்சிவிற்கும் ஒரு பஞ்சமன் இருக்கிறான், அவனிடம்சென்று கர்மயோகத்தின்பெருமையைத் தெரிந்துகொள் என்றாள்.

சன்னியாசி "இதென்னஆச்சரியம். பஞ்சமனுக்கு என்னதெரியும். கொடிய பாபச்செய்கைகளைச்செய்யும் அச்சண்டாளனிடம் நானெப்படிப்போவேன்" யென்று நினைத்து, பிறகு பதிவிரதையின்வார்த்தை பொய்யாகாதென்று கருதி, அவ்வாறே மதுராபுரிக்குச்சென்று ஒருபெரிய கசாப்புக்கடைக் கருகாமையில் சென்றுபார்த்தார். அங்கே ஒரு சண்டாளன் மாமிசத்தைக் கத்தியால் துண்டித்து விற்றுக்கொண்டிருந்தான். ஹரிஹரி இந்தக் கொலைக்காரனா நமக்கு கர்மயோகத்தை உபதேசிக்கத்தக்கவன். சற்றேனும் ஜீவகாருண்யமில்லாத இவனிடம் நாம் என்ன கற்றுக்கொள்ளப்போகிறோம் என்று எண்ணினார். இதற்குள்ளாக அச்சண்டாளன் அவரைநோக்கி 'சுவாமி தங்களை எந்தப் பதிவிரதையனுப்பினளோ? சற்றுப் பொறுங்கள். என்னுடைய வேலையை முடித்துக்கொண்டு வருகிறேன்" என்றான். அப்போது சன்னியாசிக்குண்டான ஆச்சரியத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. சண்டாளன், மாமிசங்களையெல்லாம் விற்றபின் சன்னியாசியை யழைத்துக்கொண்டு வீட்டுக்குச்சென்று அவரை வெளியே நிறுத்தி, தான் உள்ளேபோனான். அங்கே அவன் தன்னுடைய தாய்தந்தையர்களின் பாதத்தைக்கழுவி அவர்களுக்கு சமஸ்த உபசாரங்களையும் செய்து ஆகாரங்கொடுத்து பிறகு வெளியேவந்து சன்னியாசியி னிடத்துப்பேசி அவர் கேட்டதையெல்லாம் திருப்தியாகச் சண்டாளன் சொன்னான். அவைகளையெல்லாங்கேட்ட சன்னியாசி ஆச்சரியமடைந்து 'ஐயா, இவ்வளவு ஞானத்தை நீர் எப்படி அடைந்தீர். இப்போது மாமிசம்விற்கும் இழிவானதொழிலை யேன்செய்கிறீர் என்றுகேட்டார். சண்டாளன் பதில் கூறுகிறான். ஐயா! உலகத்தில் எந்தகர்மமும் இழிவன்று, என்னுடைய பிறப்பு நிலைமைக்குத் தக்கபடி எனக்கு கர்மமேற்பட்டது. நான் அநேக நாளாய் இத்தொழிலைத்தான் செய்துவருகிறேன். நான் எதையும் பற்றின்றிச்செய்கிறேன். என் தாய்தந்தையர்களைக் காப்பாற்றும் நிமித்தம் இத்தொழிலைச் செய்கிறேன். ஆனால் நான் செய்யுந்தொழிலில் என்மனதை சம்பந்தப்படுத்தாமல் எதையும் நான் சாக்ஷியாகப்பார்த்துக்கொண்டிருப்பதால் எனக்கு ஞானம் உண்டாயிற்று என்றான்.

ஆரியமித்திரர்களே! இக்கதையால் என்ன தெரிகிறது? எந்தஜாதியிற் பிறந்தாலும் அந்த ஜாதிக்கடுத்த கர்மங்களைப் பற்றின்றிச்செய்தால் ஞானம் உண்டாகிறது. எப்படி இராஜயோகம் ஞானத்தையடையநல்ல சாதனமோ அப்படியே கர்மயோகமும் ஓர் சாதனமே. சாதனமின்றி ஒன்றையும் சாதிப்பவர் உலகில் இல்லை. ஒவ்வொருவனும் எப்போதும்கர்மத்தைச்செய்யவேண்டும் ஆனால் அக்கர்மம் பலனை உத்தேசித்துச் செய்யக்கூடாது. இதுதான் சர்வோத் கிருஷ்டமான கீதையின் கருத்து. நம்முடைய மனம் ஓர் ஏரிபோலிருக்கிறது. நமக்குண்டாகும் சங்கற்பங்கள் அவ்வேரியில் அடித்து அடங்கும் அலைகளைப்போன்றது. ஏரியில் அடிக்கும் அலைகள் பார்வைக்கு அடங்கிவிட்டதாகத் தோன்றுகின்றனவேயல்லாமல் உண்மையில் அப்படியில்லை. அடங்கிய அலைகள் மறுபடியும் கிளம்பிக்கொண்டேயிருக்கும். அதுபோல மனமாகிய ஏரியிலும் சங்கற்பங்களுண்டாகி உடனே மறைந்து மறுபடியும் தோற்றிக்கொண்டேயிருக்கும். அலைகளாகிய சங்கற்பங்கள் மறைந்ததுபோல் தோன்றினாலும் உண்மையில் அவைகள் மறைந்துபோகவில்லை அவைகளின் அடையாளம் அல்லது குறிப்புமனதிற் குடிகொண்டிருக்கின்றன. இந்த அடையாளங்களைத்தான் சம்ஸ்காரங்கள் என்று

பெரியோர் சொல்லுகிறார்கள். நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், நம்முடைய தேகத்தின் ஒவ்வொரு அசைவும் நம்முடைய எண்ணங்களும் மனதில் படிந்திருக்கும் அடையாளம் அல்லது சம்ஸ்காரத்தின் காரியமே. நாமிப்போதிருக்கும் நிலைமையும் முன்னேற்பட்டமேற்கூறிய சம்ஸ்காரங்களால் நடந்தேறுகிறது. நல்ல ஸம்ஸ்காரங்களை யுடைத்தானவன் நல்லவனாயிருக்கிறான். கெட்ட சம்ஸ்காரங்களையுடையவன் கெட்டவனாயிருக்கிறான். ஸம்ஸ்காரங்களுக்கு வலிவு அதிகம். அதை மாற்ற ஒருவராலும் ஆகாது. ஆகையால்தான் துஷ்டனாயிருப்பவனுக்கு எவ்வளவு நியாயத்தைச் சொன்னாலும் அவன் அதைக்கேளாது துஷ்டனாகவே யிருக்கிறான். உத்தமமான நல்ல சம்ஸ்காரங்களையுடைய நற்குணன் எத்தனை துஷ்டர்கள்சேர்ந்து போதித்தாலும் துஷ்டனாகான். நம்முடைய கையிலகப்பட்ட யந்திரம் நம்முடைய இஷ்டம்போல் சுற்றுகிறது. யந்திரத்திற்கு ஸ்வாதீனமில்லை. அதுபோல் நம்மை நல்லவர்களாகவும் துஷ்டர்களாகவும் செய்வது நாம் முன்செய்த கர்மங்களே யாதலின் நாம் அவைகளுக்கடங்கிய யந்திரம்போலிருக்கிறோம். இம்மாதிரியே நற்செய்கைகளும் நல்லெண்ணமும் அடிக்கடி உண்டானால் நாமும் நல்லவர்களாகிறோம். மேற்கூறிய நற்கருமங்கள் அளவுக்குமிஞ்சி அதிகமானால் நாம் பிரயத்தினப்பட்டாலும் கெடுதல் செய்ய முடியாது.

கர்மமென்பது மனோவாக்குக் காயங்களால் செய்யப்பட்டது. சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என கர்மம் மூன்றுவகையாகும். அனேகஜென்மங்களிற் சேர்க்கப்பட்ட கர்மங்களே சஞ்சிதமாம். சஞ்சிதகர்மங்களில் ஏதேனும் ஒன்று பரிபக்குவமாகி காரியத்திற்கு வந்து இப்போது எடுத்திருக்கும் தேகத்தின் ஆரம்பத்திற்குக் காரணமாயிருப்பதே பிராரத்தம். இப்போதெடுத்திருக்கும் தேகத்தில் மரணபரியந்தம் செய்யப்படும் கர்மத்திற்கு ஆகாமியம் என்றுபெயர். ஆகாமியத்தினால் சஞ்சிதம் உண்டாகி அதினின்று பிராரத்தம் வருகிறது. பயிரிடுவோன் நிலத்தை உழுது நாற்றைநட்டு தண்ணீரிறைத்துக் களைபிடுங்கிப் பயிரைப்பாதுகாத்து தான்னியத்தைக் காலத்திலறுத்து மொத்தமாய் சேகரிக்கிறான். அத்தானியத்திலிருந்து தினப்படிக்கு கொஞ்சம் கொஞ்சமாயெடுத்து உண்ணுகிறான். நிலத்தில் தான்னியத்தை யறுக்கும்வரைக்கும் செய்யும் வியவகாரங்களை ஆகாமியத்திற்கு ஒப்பிடலாம். தான்னியத்தைச் சேகரித்து மொத்தமாய்க்கட்டிவைத்தலே சஞ்சிதம். கட்டிவைத்த தான்னியத்திலிருந்து தினந்தோறும் வேண்டியதை யெடுத்துப் புசித்தலே பிராரத்தம். கர்மத்திற்குக் காரணம் மனோசங்கற்பம். ஒருவன் யாதேனுமோர் பலனையடைய மனதிற் சங்கற்பித்துக் கொள்ளுதலே ஆகாமியம். அம்மாதிரி சங்கற்பங்கள் அதிகஞ்சேர்ந்த மொத்தமே சஞ்சிதம். சங்கற்பித்துக்கொண்டவண்ணம் பலனையநுபவிப்பதே பிராரத்தம். ஆகையால் உலகத்தில் ஜனங்கள் அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்குக் காரணம் அவரவர்கள் பூர்வஞ்செய்த கர்மங்களே. அவரவர்கள் தங்களிஷ்டப்பிரகாரம் அனுபவிக்க ஆசைகொண்டு எண்ணிய மனோசங்கற்பங்களே கர்மமாகி காரியத்திற்கு வந்து அவரவர்கள்கோரியதைக் கொடுக்கின்றன. இந்த கர்மமானது அனாதியாயுள்ளது. ஜீவர்கள் உள்ளவரைக்கும் கர்மம்உள்ளது. ஜீவர்களை நித்தியமாயுள்ளவர்களென்று சொல்லும்பக்ஷத்தில் கர்மத்தையும் அனாதியாய் நித்தியமாயுள்ளது என்று சொல்லவேண்டும். நித்தியமாய் உள்ளது ஒன்றே. மற்றவையெல்லாம் கானல்நீர் கயிற்றரவுபோல் தோற்றமே என்று கூறி, ஜீவர்களை அநித்தியமென்று சொல்லுபவர்களுக்கு கர்மமும் அநித்தியமே. அனாதியாயுள்ளவஸ்துவுக்கு அந்தமும் இல்லையென்று சொல்லுவது சரியே. ஆதியில்லாதவஸ்து ஒன்றே. அதுதான் ஜகத்கர்த்தாவாகியும் அகர்த்தாவாகியும் இருக்கிறது. அதைத்தான் பகவான் என்று சொல்லுகிறோம். பகவானைத்தவிர வேறேயொருவஸ்து நித்தியமாயில்லை. உலகத்தில் பகவான் எல்லாவஸ்துக்களிலும் அந்தரியாமியாய் பிரவேசித்திருப்பதால் அவ்வஸ்துக்களெல்லாம் நித்தியம்போல் தோன்றுகிறது. உண்மையில் வஸ்துக்களுக்கு நித்தியத்துவமில்லை. பகவான் ஒருவனே நித்தியன், ஆதியற்றவன், அந்தமில்லாதவன். மற்றவையெல்லாம் அவனிடத்துத்தோன்றி யடங்குவன. உலகத்திலுண்டாகிய வஸ்துக்களெல்லாம் எப்படி ஒருகாலத்தில் நித்தியமாய் அதாவது அனாதியாய்த் தோன்றுகின்றனவோ, அவ்வண்ணமே, இக்கர்மமும் அனாதிபோல் தோன்றுகின்றது. உண்மையில் கர்மம் அனாதியல்ல. இன்னகாலத்தில் உண்டாயிற்று என்று சொல்லமுடியாததால் அனாதியென்கிறோம். ஓர் மரத்தின் விதை எப்போது உண்டாயிற்றென்று கேட்டால் என்னசொல்லுகிறது. இன்னகாலத்தில் உண்டாயது என்று சொல்லமுடியாததால் விதையை அனாதியென்கிறோம். வாஸ்தவத்தில் விதை அனாதியாயிருந்தால் அதிலிருந்து எப்போதும் மரம் உண்டாகவேண்டும். விதையை சிறிது அக்கினியில் வறுத்திட்டால் அதற்கப்புறம் அவ்விதை முளைக்காததற்குக் காரணமென்னை? அனாதியாய் அதனிடத்திருந்த சக்தியானது அந்தத்தையடைந்ததல்லவா? அதுபோலவே கர்மமும் அனாதிபோலத்தோன்றினும் கர்மங்களைப் பற்றின்றிச் செய்து அதனால் ஞானத்தையடைந்தால் கர்மமும் நசித்

துப்போகிறது. "சொல்லியஞானிக் கினிப்பிறப்பில்லாமை தூமொழியா யோடிகேளாய், நெல்லுமுதலாம் விதைகனெருப்பில்வருத்தான் முளையாதாற்போல, வல்லும்பகலுமறவே சுடருமறிவாம் வடவையெரியில், வல்லவரும்பலவித்தா மவித்தையும் வேவலான்மேன் முளையாவாம்" என்று ஆன்றோர் கூறியுள்ளார். ஜனனத்திற்கு வித்தாகிய அவித்தை அல்லது அஞ்ஞானம் அதாவது கர்மம் ஞானாக்கினியினால் வறுக்கப்பட்டால் மறுபடியும் ஜென்மம் உண்டாகாது.

மேற்கூறிய கர்மங்கள் மூன்றனுள் பிராரத்தத்தை மனிதன் அனுபவித்தே யொழிக்கவேண்டும். இரண்டு உருளைச்சக்கரங்களை ஓர்கொம்பின் இரண்டு முனைகளிலும் தனித்தனியே கோர்த்து விரைவாக ஓடும்படி உருட்டிவிட்டு அது ஓடும்போது மத்தியிலிருக்கும் கொம்பை யொடித்துவிட்டால் ஓடிக்கொண்டிருந்த சக்கரங்கள் உடனே நில்லாது. அச்சக்கரங்கள் சிறிது தூரம் ஓடியபின்தான் நிற்கும். அதுபோல ஒருவன் வர்த்தமான ஜென்மத்தில் ஞானத்தையடைந்தாலும் ஜீவன்முக்தனானாலும் பிராரத்தகர்மத்தின் காரியமாயெடுத்திருக்கும் அந்தஜென்மத்திலடையவேணடிய சுகதுக்கங்களை யனுபவித்தபின்னரே ஜனனபந்தம் நீங்கும். ஆகாமியகர்மமானது மனிதன் ஜாதிக்கடுத்த சற்கருமங்களை பலனில் ஆசைவைக்காமல் பகவதார்ப்பணமாகச் செய்தலினால் நாசமடைகிறது. சற்கருமங்களைப் பற்றின்றிச்செய்தலால் ஆகாமியம் நசிப்பதுடன் ஞானப்பிராப்தியு முண்டாகிறது. அஞ்ஞானத்தின் விக்ஷேப அம்சமாகிய பிராரத்தம் அனுபவித்தால் நசிப்பதுபோல, அஞ்ஞானத்தின் ஆவரணஅம்சம் இடைவிடா விசாரணையால் அடைந்த ஞானத்தினால் நிவர்த்தியாகின்றது. ஆவரணம் அதாவது அந்தகாரம்நிவர்த்தியாகவே ஆவரணத்தை யாசிரயித்துள்ள சஞ்சிதகர்மமும் நாசமாகின்றது.

விகிதகர்மங்களென்றும் நிஷித்தகர்மங்களென்றும் இரண்டுவிதமுண்டு. நித்திய, நைமிதிக, காமிய, பிராயச்சித்தகர்மங்கள் நாலுஞ்சேர்ந்தது விகிதகர்மங்கள். சாஸ்திரத்தில் மனிதன் செய்யும்படியாகக் கூறப்பட்டவைகளே விகிதகர்மங்கள். சாஸ்திரத்தில விலக்கப்பட்டகர்மங்களே நிஷித்தகர்மங்கள் நிஷித்தகர்மங்கள் பாபத்தைவிர்த்தியாக்கும். விகிதகர்மங்களினால் புண்ணியமுண்டாகும். நித்தியகர்மமென்பது மனிதன் தினந்தோறும் செய்யவேண்டிய கர்மங்கள். அவைகள் ஸ்நானம், சந்தியாவந்தனம், மூர்த்திகள் ஆராதனம் முதலியவைகளே. விசேஷகாலங்களில் செய்யும் கர்மங்களே நைமிதிகம். உபநயனம், விவாகம், ஸ்ரீமந்தம் முதலான சுபகாரியங்களும் சிராரத்தமுதலான அசுபகாரியங்களும் நைமிதிகமெனப்படும். காமிய கர்மமென்பது ஓர் பலனை யடையக்கோறி வேதத்தில்சொல்லிய யாகயக்ஞதானதவங்களைச் செய்தல். பிராயச்சித கர்மமாவது தெரிந்தோ தெரியாமலோ செய்த பாபச்செய்கைகளுக்கும் அறிந்தே, அறியாமலோ செய்யவேண்டிய கர்மங்களைச் செய்யாமல் விட்டதற்குப் பிராயச்சிதமாக சில கர்மங்களைச்செய்து பரிசுத்தமாக்கிக் கொள்ளுதல். மறுபடியும் கர்மங்கள் சகாம, நிஷ்காம கர்மங்களென்று இரண்டுவகையாக பிரிந்திருக்கின்றன. சகாமகர்மமென்பது காமியகர்மம், குடும்பவிர்த்தி, தனதான்னியவிர்த்தி, சுவர்க்கலோக போகப்பிராப்தி இவைகளையடைவதற்காகச்செய்யுங் கர்மங்களே சகாமகர்மங்கள். ஓர் பலனையும் இச்சியாது எல்லாம் பகவானருளால் நடந்தேறுகிறது. நமக்கு ஒரு அதிகாரமும் இல்லையென்று நினைத்து, சற்கர்மங்களை பகவத் பிரீதியாகச்செய்தலே நிஷ்காமகர்மம். இதுதான் நித்தியமான மோக்ஷசாம்பிராஜ்ஜியத்தைக் கொடுக்கும் உத்தமமான கர்மம். கர்மத்தைச் செய்யும்போது ஞானத்தையும், ஞானத்தில் கர்மத்தையும் பார்ப்பவனே புத்திமான். அவன்தான் மோக்ஷத்திற்சேற்றவன். என்று கீதையில் பகவான் வாக்கியமிருக்கிறது. யாவனொருவன் கர்த்திருத்துவத்தைப் பிரகிருதியில்வைத்து அதாவது இந்திரியவியாபாரங்களெல்லாம் கர்மாதீனமென்று கர்மபலத்தில் சம்பந்தப்படாமல், "நான் சிறிதும் செய்கிறேனில்லையென்றநினைத்து கர்மங்களைச்செய்துவருகிறானோஅவன் பிருகிருதியோடுகலர்திருந்தாலுகிலும் ஜலத்திலுள்ள தாமரையிலையைப்போல்,பந்தத்திற்குக்காரணமானபாவத்தால்கட்டுப்படான். பூலோகசுவர்க்கலோகபலன்களில் மனம் சலிக்காமல் ஆத்மா ஒன்றையேநாடிக் கேவலம் ஆத்மசுத்தத்திற்காக கர்மம்செய்பவன் ஆத்மானுபவமென்னும் சுகத்தை யடைவான் அப்படி ஆத்மாவை தரிசித்துபேரின்பத்தையடையவெண்ணாமல்பலனில்லை அபேக்ஷையோடு கர்மம்செய்பவன் அக்கர்மத்தால் கட்டுப்பட்டு நித்தியசமுசாரியாவான். ஆதலினால் புருஷன் தான்செய்யுங் கர்மங்களெல்லாம் இந்திரியரூபமாய் விகாரப்பட்டிருக்கும் பிரகிருதியைச் சேர்ந்ததென்று நினைத்து ஆத்மாவை பிணையினின்று விடுவிக்கைக்காக பலாபேக்ஷையின்றிக் கர்மத்தையே செய்யக்கடவனென்ற சாயிற்று. ஆத்மாவுக்கு தான்செய்தனென்கிற கர்த்திருத்துவமானது சுபாவத்தாலுண்டானதல்ல, பழய கர்மவடிவாகவந்த சரீரஸம்மந்தத்தால் உண்டானது என்கிற மனதோடு புருஷன் தான்செய்யுங் கர்மங்களையெல்லாம் நவத்துவாரபட்டணமானதேகத்தில்வைத்து தான் அக்கர்மங்களை மனநற்கொள்ளாமல் சுதந்திரனாய்

சுகமாயிருக்கக்கடவன். கர்மயோகத்தின் முக்கியகருத்து என்னவென்றால் மனிதன் கர்மத்தையும் விடாமல் செய்யவேண்டும். பந்தத்தையும் ஒழிக்கவேண்டும். ஒருகர்மமும் செய்யாமலிருக்க மனிதனுக்கு சாத்தியப்படாதாகையால் சற்கருமங்களைச்செய்துதான் காலத்தைகழிக்கவேண்டும் பந்தத்தை உண்டாக்காமல் செய்வதற்கு யுக்தியாகத்தான் கர்மபலத்தில் ஆசைவைக்காமல்செய்யும்படி பெரியோர்களும், மகரிஷிகளும்சொல்லுகிறார்கள். பலனைகோரினால் உடனே மனதில் மேற்கூறிய ஸம்ஸ்காரம் உண்டாகிவிடுகிறது. சமயம்வந்தபோது அப்பலனையனுபவித்தற்கு ஜென்மங்களை யெடுக்கவேண்டும். மனதில் ஸம்ஸ்காரங்கள் தருதலேகர்மம் உண்டாவதற்கு காரணம். இதுதான் கர்மயோகத்தின் விசேஷம் இதுதான் கர்மயோகத்தின் இரகஸ்யம்.

## வாயு அல்லது காற்று.

சாதாரணவாயுவானது நமது கண்ணுக்குத்தோன்றாத பொருளாயிருந்தும் அது பூமியில் எங்கும் வியாபித்திருக்கிறது. அது இந்தப்பூமியை எல்லாப்பக்கத்திலும் கவிந்துகொண்டு பூமிக்கு நாற்பத்தைந்து மைலுக்குக் குறையாத உயரமட்டும் பரவியிருக்கிறது. சிலர் இருநூறுமைல் உயரம் பரவியிருக்கிறதென்று நினைக்கிறார்கள். இந்தவாயுவை நாம் காணக்கூடாதாயினும் அதற்கும் பதார்த்தங்களுக்குள்ள எடை, சலனம் முதலிய குணங்களெல்லாமுண்டு. அதை நாம் பரிச உணர்ச்சியினால் அறிந்துகொள்ளுகிறோம். அது அசைந்து நமது உடலின்மேல் தாக்கும்போது, மற்றப்பதார்த்தங்களைப்போலவே வாயுவும் ஒரு பதார்த்தமென்றுநாம் தெரிந்துகொள்ளுகிறோம். ஒரு பாத்திரத்தை ஜலத்தில் கவிழ்த்து அமுக்குவோமானால் அந்தப்பாத்திரத்திற்குள் வாயு இருக்கிறபடியால் முழுதும் அதற்குள் ஜலம் செல்லாது. அப்பாத்திரத்தைச் சிறிது சாய்த்தால் அதற்குள் ஜலம் போகப்போக அங்கிருக்கும் வாயு குமிழிகளாக வெளியேவரும். இதனாலும் வாயுவும் ஒரு பதார்த்தமென்று தெரிந்துகொள்ளலாம். மற்ற பதார்த்தங்களுக் கிருப்பதுபோலவே வாயுவுக்கும் எடை அளவு உண்டு. வாயுநிறைந்திருக்கும் ஒரு குப்பியை முதலில் நிறுத்து பின்பு வாயுவாங்கி என்னும் (Air-pump) ஓர் சூத்திரத்தால் அதிலுள்ளவாயுவை நீக்கிவிட்டு நிறுத்தால், வாயுவில்லாத குப்பியின் எடை குறைகிறது. ஒருகன அடியுள்ளவாயுவின் எடை 573½ - நெல்லெடை உள்ளதென்று கண்டறியப்பட்டிருக்கிறது. பதின்மூன்று கனஅடிசரியாக ஓரிராத்தலாகிறது. பூமியின்மேல் பரவியிருக்கும் வாயுவினுடைய பாரமானது ஒவ்வொருசதுர அங்குலத்தின் மீதும் பதினைந்து இராத்தலுக்குக் குறையாத அளவினதாக இருக்கிறது. வாயுவானது சகல பிராணிகளுக்கும், புல், பூண்டு, மரம் முதலிய தாவரப்பொருள்களுக்கும் இன்றியமையாததாக இருக்கின்றது வாயுவில்லாவிடில் ஒரு பிராணியும் ஜீவித்திராது, புல் பூண்டும் முளையா; விளக்கும் நெருப்பும் எரியா; சத்தம் கேட்காது; மழை யுண்டாகாது.

வாயுவானது (பிராணாதாரமான) ஆக்ஸிஜன், நைட்ரோஜன் என்று சொல்லப்படும் இரண்டுவஸ்துக்களின் மிசிரபதார்த்தமேயல்லாமல் தனிப்பொருளன்று. ஜீவஜெந்துக்களெல்லாம் சுவாசத்தை உள்ளேவாங்கும்போது வாயுவை உள்ளேகொள்ளுகின்றன. அந்த வாயுவிலுள்ள ஆக்ஸிஜன் சுவாசாசயத்திலமைந்திருக்கும் சிறு இரத்த நரம்புகளிலுள்ள உதிரத்தோடுகலந்து அதைச் சுத்தப்படுத்துகிறது. சுவாசத்தை வெளியே விடும்போது ஜீவப்பிராணிகளுக்கு உதவாத நைட்ரோஜனும் தேகத்திலுண்டாகும் கரித்திராவகமென்னும்ஒரு விஷத்தன்மையுள்ள வாயுவும் வெளிப்படுகின்றன. ஜீவஜெந்துக்களினுடைய தேகங்களிலிருந்து வெளிப்படும் இந்த விஷவாயுவு புல், பூண்டு, மரம் முதலான தாவரங்கள் வளருவதற்கு இன்றியமையாததாக இருக்கின்றது. இவ்விஷவாயு கரியும் ஆக்ஸிஜனும்சேர்ந்த மிசிரவாயுவாக இருக்கிறது. தாவரங்கள் சூரியவெளிச்சத்தினுதவியால் இவ்வாயுவிலுள்ள கரியையும் ஆக்ஸிஜனையும் வேறுவேறாகப்பிரித்து, தங்களுக்குவேண்டிய கரியைக் கிரகித்துக்கொண்டு, ஜீவஜெந்துக்களுக்கு வேண்டிய ஆக்ஸிஜனை வெளிப்படுத்துகின்றன. இவவிதமாய் ஜீவஜெந்துக்களும் தாவரவஸ்துக்களும் ஒன்றுக்கொன்று உதவிசெய்கிறது மிகவும் ஆச்சரியமல்லவா!

விளக்கெரிவதும் அநேகவிஷயத்தில் ஜீவஜெந்துக்கள் சுவாசம்விடுவது போலத்தான். சுடர்உண்டாவதற்கு ஆக்ஸிஜனேகாரணமாக இருக்கின்றது. விளக்கெரியும்போது கொழுப்பு அல்லது எண்ணெயிலுள்ள வஸ்துக்கள் ஆக்ஸிஜனோடு கலக்கின்றன, ஆதலால் ஆக்ஸிஜனில்லாத வாயுவில் விளக்கெரியாது. ஒருபாத்திரத்திற்குள் விளக்கேற்றிவைத்து, அதில் புதியவாயு நுழையாமல் மூடிவிட்டால் சிறிதுநேரத்திற்குள் விளக்குஅணைந்துபோகும். அப்பாத்திரத்தில் அமைந்திருக்கும் வாயுவிலுள்ள ஆக்ஸிஜனெல்லாம் விளக்கெரிவதனால் கழிந்தவுடன், எரிவதற்கு ஏதுவில்லாமல் விளக்கு நின்றுபோகும். மனிதர்கள் சுவாசிக்கத்தகுந்த சுத்தமான வாயு ஓரிடத்தில் இருக்கிறதென்றும் இல்லையென்றும் விளக்

கினல் தெரிந்துகொள்ளலாம். ஒரு பாழ்ங்கிணற்றிலாவது பூமிக்குள் மூடப்பட்டுள்ள அறையிலாவது ஒரு விளக்கை ஏற்றிவிட்டுப் பார்க்கையில் அது நன்றாய் எரிந்தால் அவ்விடத்தில் சுத்தமானவாயு இருக்கிறதென்றும், விளக்கு நன்றாய் எரியாவிட்டாலும் அணைந்துவிட்டாலும் சுத்தமானவாயு இல்லையென்றும் தெரிந்துகொள்ளலாம். ஒருபாத்திரத்திலுள்ள வாயுவில் ஏறக்குறைய ஐந்தில் ஒருபங்கு ஆக்ஸிஜனும், மற்ற நாலுபங்கு நைட்ரோஜனும் இருக்கும். இவ்விரண்டுந்தவிர சிறிது கரித்திராவகவாயுவும், சிறிது அசுத்தமான வேறு வாயுக்களும், நீராவியும் அதில் வியாபித்திருக்கும்.

நம்மைச்சுற்றிலும் நாம்வாசஞ்செய்யும் இடங்களிலும் வீடுகளிலும் உள்ள சாதாரணவாயு எவ்வளவு சுத்தமாக இருக்குமோ அவ்வளவும் நமதுதேகம் ஆரோக்கியமாக இருக்கும். சுத்தமானவாயு இல்லாமற்போனல் விளக்கு எப்படி எரியாமல் மங்கியாவது அணைந்தாவது போகிறதோ அப்படியே நாம்சுவாசத்தினுல் உட்கொள்ளும்வாயு சுத்தமில்லாமலிருந்தால் நாம் அசௌக்கியமடைவோம்; அதிகசுத்தமாக இருந்தால் ஜீவநஷ்டமும் உண்டாகலாம். ஆதலால் நம்முடைய வீடுகளிலும் அவற்றிற் கருகிலும் அசுத்தவஸ்துக்களில்லாமல் செய்துகொள்ளவேண்டியதுமல்லாமல் நாம்மூச்சுவிட்டு வெளியே போக்குகிற அசுத்தமான வாயு நமக்கருகில் தங்கி அதை மறுபடி நாம் உட்கொள்ளாமலிருக்கும்படி; உடனுக்குடனே புதிய வாயு வந்துகொண்டிருக்கத்தக்க ஏற்பாடுகள் செய்துகொள்ளவேண்டியது அதிக அவசியமாயிருக்கிறது. நாம் தூங்குகையில் இந்த ஏற்பாடு மிகவும் அவசியமாயிருக்கவேண்டும்; ஆகையால் அசுத்தமான வாயு வெளியேபோகவும் சுத்தமானவாயு உள்ளேவரவும், நமது வீட்டு அறைகளிலெல்லாம் தகுந்த பல கணிகள் இருக்கவேண்டும்; கெட்ட வாயுவெளியே போவதற்கு வழியிருந்தாலல்லாமல் சுத்தமான வாயு ஒரு அறைக்குள்ளே நுழையாது. ஆதலால் ஒவ்வொரு அறைக்கும் குறைந்தபக்ஷம் இரண்டு பல கணிகள் ஒன்றற்கொன்று எதிர்முகமா யிருக்கவேண்டும். பூமியின்மீது எங்கும் சாதாரணவாயு பரவி யிராவிடில் சத்தம் உண்டாகமாட்டாது. அசைவின்றி அடைமந்திருக்கும் ஒரு குளத்துஜலத்தில் ஒரு சிறுகல்லை எறிந்தவுடனே ஜலமானது அசைக்கப்பட்டு அணியணியாகச்சிறு அலைகள் உண்டாகிப் பரவுகிறதுபோல் நாம் பேசும்போது வாயு அசைந்து அலையலையாய்ப் பரவும். அவ்வலைகள் காதிற்குள் ளமைந்திருக்கும் ஜவ்வைத்தாக்கச் சத்தம் உண்டாகிறது. சாதாரணவாயுவை நீக்கிய ஓர் பாத்திரத்திற்குள் ஒரு மணியை ஆட்டினுல் அதனொலி நமக்குக்கேளாது. சத்தமானது சாதாரணவாயுவில்ஒரு செகண்டில் 1,125 - அடியும் ஒருமினிட்டில் $12\frac{3}{4}$-மைலும், ஒருமணிநேரத்தில் 765-மைலும் செல்லும். வாயுவின் உதவியினுலேதான் காலையில் சூரியோதயத்திற்கு முன்னும் மாலையில் சூரியாஸ்தமனத்திற்குப் பின்னும் சிறிது வெளிச்ச முண்டாகிறது. வாயு வில்லாவிடில் சூரியன் அஸ்தமனமானவுடனே திடீரென்று பேரிருள் கவிந்துகொள்ளும். சாதாரண வாயுபூமியைச் சூழ்ந்திருப்பதனுல் சூரியவெப்பத்தினுல் சமுத்திரங்களிலும் குளங்களிலும் உள்ள ஜலம் ஆவியாய் மேலே எழும்பி ஆகாயத்தில் நிற்கும். அது மேகமெனப்படும். இம்மேகம் குளிர்ச்சியினுல் மறுபடி ஜலரூபமடைந்து அச்சலம் வாயுவைவிட பளுவானபடியால் மழைத்துளிகளாக பூமியில் விழுகின்றது. மழை நீர் ஆறுகப் பெருகிக் கடல்களிலும் தடாகங்களிலும் போய்ப்பாய்கின்றது- சமுத்திரங்களிலும் தடாகங்களிலு முள்ள ஜலம் முன்சொன்னதுபோல் சூரிய வெப்பத்தினுல்ஆவியுருவமடைந்து மேகமாகும். ஆதலால் சாதாரணவாயு பூமியைச் சூழ்ந்திருக்காவிடில் மழை உண்டாகாது.

நமது பூமியைச்சுற்றி யிருப்பதுபோலச் சந்திரனைச்சுற்றி வாயுவில்லையென்றுக் கோளசாஸ்திரிகளிற் பெரும்பான்மையோர் ஊகிக்கிறார்கள். அது உண்மையாகும்பக்ஷத்தில், நமது பூமியின்மீதுள்ள ஜீவஜெந்துக்கள் புல் பூண்டு முதலானவைகளைப் போன்றவை சந்திரன்மீதிருக்க மாட்டாவென்பது நிச்சயம். ஜீவஜெந்துக்க ளிருக்கக் கூடுமாயினும் அவை நீதவாத்தியங்களின் முழக்கத்தைக்கேட்பதற் கிடமிருக்கமாட்டாது. மேகங்களுண்டாகிச் சூரியப் பிரகாசத்தை மறைக்க மாட்டா. மழை ஒருபோதும் பெய்யமாட்டாது. ஆனபடியால் சந்திரன்மீது எவ்வித ஜீவ ஜெந்துக்களாவது இருந்தபோதிலும், அவை நமது பூமியின்மீது நாம் காணும் ஜெந்துக்களை எவ்விதத்திலும் ஒத்திராவென்பதற்குச் சந்தேகமில்லை.

## பொதுவானவிஷயங்கள்.

"பக்திசெய்தால் முக்தி எய்தும் என்ற ஆன்றோர் வாக்கியத்திற் கிணங்க சகல ஜனங்களும் ஸம்ஸாரஸாகரத்தைக் கடக்கவேண்டி பக்திமார்க்கத்தைக் கைப்பற்றுவ தவசியம். அவ்வித பக்திக்கு நம்பிக்கையானது முக்கிய அஸ்திவாரமாயுள்ளது. நமது தெய்வம், மதம், வேதம் முதலியவற்றில் நம்பிக்கை கொள்ளாவிட்டால் நமக்குப் பக்தியுண்டாக மாட்டாது.

"சொன்னதைக் கேளாதவன் சுகம்பெற மாட்டான்" என்ற பழமொழியுண்டு. குருவின் வார்த்தைப்படி நடவாமல் எதையும் ஆக்ஷேபிக்கும் குணமுள்ளவன் துக்கத்தையடைகிறான். முன்னொருசமயம் விபீஷணரின் நட்பையடைந்த ஓர்நரன் தான் கடலில்தாராளமாய் நடக்கும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று கேட்க விபீஷணர் அவ்வாறே யாகுகவென்று ராமநாமமடங்கிய ஓர் சீட்டை அவனுடைய துணியின்னோரத்தில் முடிந்து "அடே நீ இந்த முடிச்சை அவிழ்த்துப் பாராமல் நம்பிக்கையுடன்போனால்சமுத்திரம் உனக்கு நடந்துபோகக்கூடிய தன்மையிலிருக்கும். எந்த நிமிஷத்தில் நீ சந்தேகங்கொண்டு இந்தமுடிச்சை அவிழ்க்க எத்தனிக்கிறையோ அந்த நிமிஷத்திலேயே முழுகியிறந்துபோவாய்" என்றார். அதைக்கேட்டு அந்தணன் மிகுந்த நம்பிக்கையுடன் கடலைத்தாண்டிப்போனான். மறுபடியும்வந்தான். இவ்வாறு சிலநாள் சமுத்திரத்தில் தாராளமாய் நடந்துபோய்க் கொண்டிருக்கையில் ஓர்விதகெட்ட எண்ணம் அவன்மனதி லுண்டாயிற்று. விபீஷணர் நம்முடைய துணியில் முடிந்திருக்கிறது ஏதோ ஓர்வித பச்சிலைபோல் தோன்றுகிறது. அதை நாம் கண்டுகொண்டால் எல்லோருக்கும் சொல்லி விடுவோமென்ற சந்தேகத்தால் நம்மை வீணாகப் பயமுறுத்தினார்போலும். நல்லது! அது இன்னதென்று பார்ப்போம்! பார்த்தபிறகு அனேகருக்கு அவ்வித பச்சிலையைத் துணியிற்கட்டிக் காசு சம்பாதிக்கலாம் என்று மெள்ள முடிச்சையவிழ்த்தான். உடனே ஆழத்திற் முழுகிச்செத்தான். இதுபோல் எத்தனைகாலம் ஈசுவரனிடம் நமக்கு நம்பிக்கையிருக்கிறதோ அத்தனைகாலம் வரையுமே நமக்குச் சகல நன்மைகளு முண்டாகும். அத்தகைய நம்பிக்கை சிறிது குறையுமானால் நமது க்ஷேமங்களும் நசிக்கத்தொடங்கும்.

"தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்பதுபோல், வலியோர்கள் எளியோரை ஏளனம்செய்வது இயல்பாயிற்று. முன்னொருசமயம் நல்ல புத்திசாலியான ஓர் ஸ்திரீயினிடம் அதிபால்யன் ஒருவன்தான்படித்தபடிப்பின் திறத்தைக் காட்டவேண்டி பற்பல விஷயங்களையும்பற்றிப் பேசிக் கடைசியில் ஸ்திரீகளின் துர்நடத்தையை உதகரிக்கும் அனேககதைகள்சொல்லி சேலைகட்டியமாதரை நம்பொணாது நம்பொணாது என்று முடியும் காளப்பாட்டைப்பாடினான். அவன்செய்த பிரசங்கங்களைக்கேட்ட அப்பெண்மணி மிகுந்த கோபம்கொண்டு அவனைநோக்கி "அடாபிள்ளையாண்டான், நீபடித்த பாடங்களையெல்லாம் நான்கேட்டு ஆநந்தமடைந்தேன். நான் ஒரு கதைசொல்லுகிறேன். கேள்" என்று சொல்லத் தொடங்கினாள்.

முன்னொருசமயம் ஓர் மனுஷ்யனும் ஓர் ஸிம்ஹமும் நண்பராயினர். அவர்கள் ஒருநாள் வேடிக்கையாகச் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அம்மனுஷ்யன் தன்னிடமுள்ள ஓர் படத்தைக்காட்டி, ஹேஸிம்ஹமே, இதோபார் இந்தப்படத்தை, உன்னினமொன்றை என்னினத்தான் கொல்லுகிறான். பார்த்தாயாவென்றான். சிங்கம் மனவருத்தங்கொண்டு அவனைநோக்கி "நண்பா மனிதர்களுக்குள் சித்திரக்காரர்களிருப்பதுபோல்என்னினத்தாருக்குள்ளும் சித்திரக்காரர்களிருந்தால் நீகாட்டிய ஒருபடத்துக்குப் பிரதியாக 100-படம் நான் உனக்குக் காண்பிப்பேன். அவைகளிலெல்லாம் உன்னினத்தார்களை அளவு சங்கியையின்றிக் கொன்றிருக்கும் விஷயம் கண்டிருக்கும் என்றது. இதுபோல் ஆண்பிள்ளைகள் சரித்திரம் எழுதக்கற்றிருப்பதால் பெண்பிள்ளைகளின் தலைமேலே பழியைப்போட்டு அவர்கள் துர்நடத்தைக்காரர்களென்று எழுதியிருக்கிறார்கள். வீணாகப் பெண்பிள்ளைகளைத் தூஷிப்பது பாபமன்றோ வென்றனள்.

"அசட்டுக்கு ஐங்கலக்காயம்" என்று ஓர் பழமொழி வழங்குகிறது. இதனால் காமமுண்டாவதற்குரிய பலகாரணங்களில் அசட்டுத்தனம் ஒன்றெனவறிகிறோம். மனதிற்கும் தேகத்திற்கும் தக்க முயற்சியும் பயிற்சியுமில்லாவிட்டால் அவைகள் மதமடைந்து துஷ்கிருத்தியங்களைச் செய்யத் துணிகின்றன. அதிலும் தகுந்த எவ்வளமும் தேகபலமும் அயோக்யர்களுடைய ஆதரவுமிருக்குமாயின் காமமென்னும்கொடியவிஷம் உள்ளங்கால்வழியாய் ஏறத்தொடங்கி வெகு சீக்கிரத்தில் உச்சந்தலையில் உட்கார்ந்துவிடுகிறது. இக்காலத்தில்தான் பெற்றோரும் ஆசானும் பிள்ளையின் நடவடிக்கைகளை நன்றாய்க் கவனித்து வரவேண்டும். படிப்பில் ஆசைகொள்ளும் பையன் புதிய புஸ்தகங்கள் வாங்கிப்படிப்பான். அவன் எப்போதும் கல்வியிற்றேர்ந்த கனவான்களுடன் கலந்துறவாடுவான். காமத்திலிச்சைகொண்ட விடப்பையன்கள் இதுவரையுமில்லாத புதியஅங்கவஸ்திரங்களும் குல்லாய்களும்கையில் வெள்ளிப்பூண்போட்ட தடியும் அரையிற் பட்டுக்கச்சையும் தரித்துப் பின்னோடு ஒரு சோக்கராப்பையனையும், அழைத்துக்கொண்டு பரத்தையர் குடியிருக்கும் தெருக்களில் அன்னநடை போடுவார்கள். இத்தகைய மூடப்பிள்ளைகள் பெற்றோர்களையேமாற்றுவதில் மிகுந்த சதுரர்களாயிருக்கின்றனர்.

"நாரதா கலகப்பிரியா" என்ற வசனத்தை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். அந்தநாரதர்யார்? அவர்

பிரம்மாவின் புத்திரர் ரிஷிகளுக்குள் மிகுந்த யோகசக்தியை யுடையவர். மனிதர்களுக்குள் யோகிகளிருப்பதுபோல் தேவர்களுக்குள்ளும் யோகிகளுண்டு. நாரதர் மகாயோகி. அவர் சகலலோகங்களிலும் சஞ்சரிக்கிறவர். ஒருசமயம் அவர் ஒரு பெருங்காட்டின் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் ஒருரிஷி தவஞ்செய்துகொண்டிருப்பதைக் கண்டார். அவர் வெகுகாலம் தவம்செய்வதால் புற்றுகளால் மூடப்பட்டு சடைவீழ்ந்து கண்தவிர மற்ற உறுப்புகளெல்லாம் எலும்பாகிப் பூமியிற்புதைந்து ஓர் குச்சியைப்போலிருந்தார். அவர் நாரதர் வேகமாய்ப் போவதைக்கண்டு ஐயா, எங்கு போகிறீர் என்றார், நாரதர் நான் கைலாசத்துக்குப்போகிறேன் என, ரிஷி 'ஆனால் வெகுநாளாய்த் தபசுசெய்துகொண்டிருக்கிற எனக்கு ஈசுவரன் எப்போது பிரத்தியக்ஷமாவார், என்று அவரைக்கேட்டுத் தெரிந்துகொண்டுவாரும்' என்றார். இன்னும் சிலதூரம் நாரதர்செல்லுகையில் இன்னொரு ரிஷியைக்கண்டார். அவர் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டிருந்தார். அவரும் நாரதரை நோக்கி "தாங்கள் எங்கேபோகிறீர்கள்" என்றார். நாரதர் நான் கைலாசத்துக்குப்போகிறேன் என, 'எனக்கு எப்போது மோக்ஷம்கிடைக்கும். அதை யறிந்துகொண்டுவாரும்' என்றார் இவ்விருவர்களின் வினாக்களையும் தெரிந்துகொண்டு நாரதர்போய்த் திரும்பிவந்தார். முதலில் புற்றால் மூடப்பட்டரிஷி அவரைநோக்கி நாரதரே, எனக்கு எப்போது பகவான் பிரத்யக்ஷமாவார்? என்றார். அதற்கு நாரதர் ஆம், நான் பரமசிவனைக் கேட்டேன். அவர் இன்னும் நான்குஜன்மங்கள் கழித்து உனக்குப் பிரத்யக்ஷமாவதாய்க் கூறினாரென, அதற்கு அவ்ரிஷி "நான் என்மேல் புற்று மூடும்வரை இத்தனைநாளாகத் தவஞ்செய்தும் இன்னும் நாலுஜன்மங்கள்கழித்தா எனக்கு ஈசுவரன் பிரத்தியக்ஷமாகப்போகிறார்" என்றார். பிறகு இன்னொரு ரிஷி 'ஐயா, நாரதரே எனக்குஎப்போதுமோக்ஷம்கிடைக்குமெனப் பகவானிடம்கேட்டு வந்தீரா' வென, இதோ நிற்கும் புளியமரத்தில் எத்தனை இலைகள் இருக்கின்றனவோ அத்தனைவருஷம் கழித்து உனக்கு மோக்ஷம் கிடைக்கும்' என்றார் அதைக்கேட்டு அந்தரிஷி பேரானந்தமடைந்து எனக்கு அத்தனை சீக்கிரத்தில் மோக்ஷம் கிடைக்கிறதாவென்று கூத்தாடினார். உடனே ஆகாசவாணி 'உனக்கு இந்த நிமிஷத்திலேயே மோக்ஷம் கிடைத்துவிட்டது' என்றது. அம்மாதிரியே பகவான் அவரை கைலாசத்திற்கு அழைத்துச்சென்றார்.

---

ஒருகாலத்தில் ஒரு சிஷ்யனுடைய மனதில் கர்வம் புகுந்தது. அதாவது குருவினிடம் தனக்கிருக்கும் அன்பே வெகுசிறந்ததென்று அவன் எண்ணினான். இதையறிந்த குரு தன்சிஷ்யனை ஒருநாள் ஒருவனத்துக்கு அழைத்துப்போனார். அங்கே ஓர்பிராமணன் உருவின கத்தியை இடுப்பில்தரித்து உலர்ந்தபுல்லைத் தின்றுகொண்டிருந்தான். அவனைக்கண்ட சிஷ்யன் குருவை நோக்கி "சுவாமி இந்த பிராமணன் ஹிம்சைசெய்யாமலிருப்பதே பெரியதர்மமென்று உணர்ந்தவனாய் பச்சைப்புல்லில் பிராணனிருக்குமென்று அறிந்து, காய்ந்து உலர்ந்தபுல்லை உணவாக உட்கொள்ளுகிறான். பிராணிகளிடம் அவ்வளவு அன்புகொண்ட இவன் எதற்காகக் கத்தியை இடுப்பில் கட்டிக்கொள்ளவேண்டும்? இவனுக்குயார் சத்துரு? எவனைக்கொல்லுவதற்கு இவன் நினைத்திருக்கிறான்? என்று கேட்க, அவர் சிஷ்யனைப் பார்த்து, அக்கேள்விகளை அப்பிராமணனிடமே கேட்டு மறுமொழி தெரிந்துகொள்ளும்படி கூறினார்.

"சுவாமி திருவாக்குக்கு எதிர்வாக்குண்டா" என்று கூறிச்சென்ற சிஷ்யனுக்கும் பிராமணனுக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

சிஷ்யன்:—ஐயா பிராமணோத்தமரே தாங்கள் எதற்காகக் கத்தியை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்.?

பிராமணன்:—எனக்கு நாலு சத்துருக்கள் இருக்கிறார்கள். அவர்களைக்கண்டால் வெட்டவேண்டும். அதற்காகத்தான் கத்தியைத் தயாராய்வைத்துக்கொண்டிருக்கிறேன்.

சிஷ்யன்:—முதல்சத்துருயார்?

பிராமணன்:—நாரதர்.

சிஷ்யன்:—நாரதர் தங்களுக்கு என்னகெடுதல் செய்தார்? அவரையேன் கொல்லவேண்டும்?

பிராமணன்:—நாரதன் வெகுதுஷ்டப்பயல். எப்போதும் வீணையைவாசித்துக்கொண்டு எம்பெருமானை ஸ்தோத்திரம்செய்கிறான். என்னுடைய கண்மணியாகிய கண்ணனைக் கொஞ்சமேனும் தூங்கவிடுகிறதில்லை. அவர் சற்றுநேரம் பள்ளிகொண்டால் உடனே நாரதன் வீணையை வாசித்து நாராயணா நாராயணாவென்று கதறி நித்திரையை பங்கம்செய்கிறான். இவன் பகல் இரவின்றி பகவானை ஸ்தோத்திரம்செய்து அவர்பிராணனை வாங்குகிறான், இவனுக்கிருக்கும் துணிவைப்பார்த்தால் எனக்கு வெகுகோபம் உண்டாகிறது. பகவானுடைய தேகசவுக்கியத்தைக்கெடுக்க நினைத்த இந்த நாரதன்என்னும் படுபாவியைக்கண்டவுடன் இந்தக் கத்தியால் வெட்டப்போகிறேன்.

சிஷ்யன்:—தங்களுடைய இரண்டாவது சத்துரு யார்?

பிராமணன்:—திரௌபதையென்றொரு துஷ்டை யிருக்கிறாள் அவள்தான்.

சிஷ்யன்:—அவள் என்னசெய்தாள்?

பிராமணன்:—அவள்என்குலதெய்வமாகிய ஸ்ரீகிருஷ்ணன் சாப்பிடஉட்காரும்போது அவருடைய கழுத்தைப்பிடித்தாள். எப்படியெனில்? காமியவனத்திலிருந்த பாண்டவர்களிடம் விருந்துண்ணவந்த தூருவாசர் சாபமிடாமலிருக்கும்படி திரௌபதி கண்ணனைவேண்டிக்கொண்டாள். அப்போதுதான் கண்ணன் போஜனம்செய்ய உட்கார்ந்தார். உடனே இந்த துஷ்டையாகிய திரௌபதியின் கூக்குரலைக்கேட்டு ஓடிப்போய் அவள் தின்றுமிகுந்த சோற்றில் ஓர்பருக்கையைத் தாம்தின்று பருக்கையிருந்த பாத்திரத்தை அக்ஷயபாத்திரமாக்கி அவளிடம்கொடுத்து அவளையும் பாண்டவர்களையும் காப்பாற்றினர். இந்த துஷ்டையின் துணிவைப்பார்த்தால் என்வயிறு பற்றியெரிகிறது. கண்ணன் சாப்பாட்டில் மண்ணைப்போட்டு அவருக்குத் தான்தின்றசேஷத்தைக் கொடுத்தாளே இவளைவிட கொடும்பாவி யாருண்டு? ஆதலின் அவளையும் வெட்டப்போகிறேன்.

சிஷ்யன்:—சுவாமி மூன்றாவது சத்துருயார்?

பிராமணன்:—மூன்றாவதுசத்துருவா? அவன் பிரகலாதனன். இவன்சிறுபயலாயிருந்தாலும் இவனுடைய போக்கிரித்தனத்திற்கு அளவில்லை. இவன் எம்பெருமானை தூணிலிருக்கச்செய்தான். இவனுடைய இஷ்டப்படியெல்லாம் கூத்தாடச்செய்தான். ஆனதால் என்னிஷ்டதேவதையைக் கஷ்டப்படுத்தின இந்த பிரகலாதனையும் வெட்டப்போகிறேன்.

சிஷ்யன்:—சுவாமி தங்களுடைய நாலாவதுசத்துருயார்?

பிராமணன்:—அந்தபயலைத்தான் இப்போது அதிதீவிரமாய்த் தேடிக்கொண்டிருக்கிறேன். அந்தப்பயல் யார் தெரியுமா? அவன்தான் அருச்சுனன்

சிஷ்யன்:—ஐயா அருச்சுனன் என்னசெய்தான்.

பிராமணன்:—அந்தப்பயல் சாக்ஷாத் எம்பெருமானை தனக்குச்சாரதியாக வைத்துக்கொண்டான். அவனுடைய தைரியத்தை நினைக்கநினைக்க என் அடிவயிறு குபுகுபு என்று பற்றிஎரிகிறது. ஆதலின் அவனைக்கண்டால் இந்தக்கத்தியால் ஒரேவெட்டாய் வெட்டிப்போடுவேன். இதைக்கேட்ட சிஷ்யனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. இந்தப் பிராமணனுக்கு பகவானிட மிருக்கும் பக்திக்கு நம்முடைய பக்தி உறைபோடக் காணாது என்று அன்றுமுதல் கர்வத்தை விட்டுவிட்டான். அதுபோல ஒவ்வொருவரும் தாம் ஈசுவரனிடம்வைத்திருக்கும் பக்தி வெகுஅதிகமென்று நினைத்து ஏமாறாமல் சிறிதென்றெண்ணி அதை யின்னும் அதிகமாக்கவேண்டும். அதாவது பகவத்பக்திசெய்வதில் ஒவ்வொருவரும் போட்டிபோடவேண்டிய தவசியமென ஏற்படுகிறது.

## நீதிமார்க்கங்கள்.

யாசகன் நான்வறியேன் என்று சொல்லுமுன்னரே அவனுக்குப் பொருள்கொடுத்தலும்; தான் உதவிசெய்தபிறகு யாசகன் நான்வறியேன் என்று சொல்லாதபடி அவனுக்குமிகுதியாகப் பொருளுதவி செய்தலும் தான் உதவிசெய்தபிறகு யாசகன் தன்னைப் பிறயாசகர் வந்து வருத்தினால் நான் வறியேன்என்று சொல்லாமல் அவர்களுக்கும் வழங்கும்படியாக அமிதமான செல்வத்தை அவனிடங்கொடுத்தலும் ஆகிய இந்த மூன்றுசெயல்கள் முதலைக்காட்டிலும் இரண்டாவதும், இரண்டாவதைக்காட்டிலும் மூன்றாவதும் கீர்த்திமிகும்படியாக விளங்கிநிற்கும் செயல்களாம்.

* * *

இரும்பும்பொன்னும் வேறேயாயினும் ஜடப்பொருள்களாகையால் அவற்றை உலோகவகையான இனத்தாலே இரண்டுக்கும் பொன்என்று பெயரிட்டு வழங்குவது வேறுகருத்து. இம்மை மறுமை, புண்ணியம் பாவம், நன்மை தீமை முதலியவற்றைப் பகுத்தறியவல்லராகையால் கொடுப்போரையும் கொடாதோரையும், மனிதஜாதியாகிய இனம்பற்றி வேறுபாடில்லாமல் மக்கள் என்று வழங்குவது எவ்வாற்றாலும் பொருந்தாது. இரப்போர்க்குக் கொடாமல் ஒளிக்கின்றவர்களுக்கு மாக்கள் மிருகங்கள் என்கிற வேறுபெயரே இடவேண்டும் அவர்கள்மக்களல்லர் என்பது கருத்து.

* * *

செல்வத்தினுடைய சுவபாவம் கர்வத்தை அதிகரித்தல். ஒருவனுக்குச் செல்வம் உண்டானால் அது கர்வத்தை யுண்டாக்கி அவனிடத்தில் குற்றங்களையே அதிகமாகும்படிச்செய்கின்றது. தரித்திரமுண்டானாலோ பாவம்! பிறரிடத்தில் யாசித்துச்செல்ல நேரிடுகின்றது. அதனால் மரணவேதனையைக்காட்டிலும், மிக்க தான துன்பம்நேரிடுகின்றது. தன்னிடம் யாசித்துவந்தவர்கள் மேலே கருணைகொள்ளாமல் அவர்க்கு யாதொன்றும் கொடாமல் ஒளிப்பதானது (ஈகையால்வரும் நன்மையை) அறியாதபேர்களுக்குத் தரித்திரத்தால் உண்டாகும் துன்பத்தைக்காட்டிலும் அதிகதுன்பத்தை உண்டாக்குகின்றது.

* * *

சமுத்திரமுண்டென்று பார்த்திராதவனும் கேட்டிராதவனும் படித்திராதவனும் சமுத்திரமில்லையென்று சொன்னால் அது பொய்யாமா? வீட்டிலுள்ள ஒருவன் வெளியேபோயிருக்க மாத்திரங்கண்டு, திரும்ப வீட்டினுட்சென்ற சங்கதியையறியாத காரணத்தால், அவன் வீட்டினுளில்லையென்பானாயின், அவன் பொய்யனுவனா? ஒருவன் கயிற்றை யரவாகக்கண்டான்; மற்றொருவன் கயிற்றைக் கயிறாகக்கண்டான். இருவரும் தாம் தாம்கண்டதைக் கண்டவாறு உண்மையைத்தான் சொன்னார்கள். இவரில் ஒருவன் சத்தியவாதியும் ஒருவன் அசத்தியவாதியுமென்று சொல்லக்கூடுமா? அதுபோல் சிலநாஸ்திகர்கள் கடவுளில்லை யென்றால் கடவுளில்லாமற் போய்விடுவாரா?

* * *

பின்னம் அபின்னமாதலும் அபின்னம் பின்னமாதலும் ஒருபோதுமின்று. எப்படியெனில், பாலின்கண் தயிரும் நெய்யும் அபின்னம்போற் றோற்றினும் பின்னம் பின்னமே. பாலை அணுபரமாணுக்களாகப் பிரித்துப்பார்க்கும் சக்தி நமக்கிருந்தால் அது வேறுவேறாகவே தோன்றும். உப்புநீரிலும் நல்லநீர், உப்பு இவை வேறுவேறா யிருக்கின்றன. உப்புநீரில் நல்லநீர் வேறாகவும் உப்புவேறாகவும் நமக்குத்தோன்றாவிடினும் அவை வேறுவேறுதான். உப்புநீரில் நூற்றுக்கு இருபத்தேழு பங்கு உப்பும் மற்றப்பங்கு நல்லநீரும் இருக்கின்றன. உப்புநீரைக்காய்ச்சினால் நூற்றுக்கு எழுபத்துமூன்று பங்கு நல்லநீர் ஆவிரூபமாய் மேலேபோக மற்ற இருபத்தேழுபங்கு பூமியிற் றங்கிவிடுகின்றது. உப்பும் நல்லநீரும் பிரிந்துபோகின்றமையால் அவை பின்னமாகக் கூடியிருந்தனவென்றே சொல்லவேண்டும். உப்புநீரைப்பார்த்தால் நீரும் உப்பும் அபின்னமாய் ஒன்றுபட்டிருப்பதாகவே தோற்றினும் உண்மையில் பின்னமாய் இரண்டுபட்டே யிருக்கின்றன. இரண்டுபட்டேயிருக்கின்றமையால் ஒன்றிருந்தவிடத்தில் மற்றொன்றில்லை. அதாவது உப்பு இருந்தவிடத்தில் நீரும் நீர் இருந்தவிடத்தில் உப்பும் இல்லை. இதைப்போலவே பாலாயிருக்குங்காலத்திலும் நெய்யிருக்குமிடத்தில் தயிரும் தயிர் இருக்குமிடத்தில் நெய்யும்இரா. இனி எள்ளில் எண்ணெய்போலென்னின் எள்ளையெடுத்துப் பிழிந்தால் பிண்ணாக்கும்நெய்யுமாகப்பிரிகின்றன. பிண்ணாக்கும்நெய்யுஞ்சேர்ந்தே யெள்ளென்னும் பேர்பெறுகிறது. அதுவும் இரண்டுபொருளாய் வேற்றுமைப்பட்டுப்போகின்றமையால் உய்த்துநோக்குழிப் பிண்ணாக்கு இருந்தவிடத்தில் நெய்யும் நெய் இருந்தவிடத்தில் பிண்ணாக்கும் இல்லையாகில் வேறுவேறு பொருளாகின்றன. ஆகையால் பின்னம் அபின்னமாதலும் அபின்னம் பின்னமாதலும் கிடையாது.

## ஞானக்கதைகள்.

ஒருசமயம் ஜனகமகாராஜன் ஓர் பிராமணனிடம் மிகுந்தகோபங்கொண்டு அவனைத் தன்தேசத்தினின்றும்ஓடிப்போகும்படிக்கட்டளையிட்டான். அதற்கு பிராமணன் 'ஐயா, ஜனகராஜனே, உமதுஉத்திரவின்படி நான் ஓடிப்போவதில் தடையில்லை. உம்முடையராஜ்யத்தின் எல்லை உமக்கெதுவரையில்சொந்தம் சொல்லும்பார்ப்போம்' என்றான். ஜனகன்யோசித்தான். ஒன்றும்தோன்றாது பிரமித்துநின்றுசிலநேரத்துக்கெல்லாம்பதில்சொல்லத்தொடங்கினான். "ஐயா, பிராமணரேஎன்முன்னோர்களிடமிருந்த ராஜ்யத்தை நான் இப்போது ஆண்டுவந்தாலும் அது எனக்குச் சொந்தமென்றுநான் எப்படிச் சொல்வேன்? என்முன்னோர்களாண்ட ராஜ்யத்தை அவர்கள் தங்களுக்குச் சொந்தமென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதுபொய்யாய்ப்போயிற்று. இவ்விராஜ்யம் அவர்களுக்கு உண்மையாகவே சொந்தமாயிருந்தால் அவர்களிறந்துபோனவுடன் அதுவும் அழிந்துபோயிருக்கவேண்டும். அவ்விதம் அழிந்துபோகவில்லை. எனக்குப்பிற்காலம் இவ்விராஜ்யம் அழியாதென்பது நிச்சயம். ஆதலின் இந்நாடு எனக்குச்சொந்தமன்று. பூமியை எத்தனையோ அரசர்கள் ஆண்டுவந்தனர் எல்லோரும் பூமியைத் தங்களுக்குச் சொந்தமென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அத்தனைபேர்களுமிறந்தனர். பூமி மட்டும் அழியாமலிருக்கிறது. ஆதலின் பூமி அவர்களுக்குச் சொந்தமல்லவென்பது தெளிவாய் விளங்குகிறது. நான் எனக்குச் சொந்தமென்று சொல்லிக்கொள்ளும் இம்மிதிலைநாட்டை இதிலுள்ளஜனங்களெல்லாம் துண்டுதுண்டாகச்செய்து அவைகளைத் தங்களுக்குச் சொந்தமென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆதலின் மிதிலாநாடு எனக்குச்சொந்தமில்லை. என்பிள்ளைகள் வசிக்குமிடம் எனக்குச் சொந்தமோவென்று பார்த்தால் அதுவும் எனக்குச் சொந்தமல்ல. என்தேகத்தைப் பார்த்தாலோ இப்போது இரத்தத்திலுள்ள பூச்சிபுழுக்கள் தங்களுக்குச் சொந்தமென்று சொல்லிக்கொள்ளுகின்றன. இறந்துபோனால் நாயும்நரியும் தங்களுக்குச் சொந்தமென்று சண்டைபோடுகின்றன. மேலும்நான் யாரென்றாலோ அதுவே சந்தேகத்தில்வந்துவிட்டது. நான் தேகமல்ல, சதையல்ல, இரத்தமல்ல, எலும்பல்ல, மனமல்ல, புத்தியல்ல, இந்திரியமல்ல இவ்விதம் நிலைகெட்டு சொந்தமென்ற பதம்இன்றி அவதிப்படும் நான் உம்மை ஊரைவிட்டோடும்படிக் கட்டளையிட்டது அறிவீனம்.

ஆதலின் பிராமணோத்தமா நீர், உம்முடைய ஆயுட்காலம்முழுவதும் உமக்கிஷ்டமானபடி இந்நகரத்திலேயேயிரும்" என்றான்.

---

ஜன்மாந்தரபாபம் ஜன்மாந்தரபுண்ணியம் என்பதை நிரூபிக்க ஒருகதை பகர்வாம். வெகுநாளைக்குமுன் ஓர்கிராமத்தில் விருத்தனும் அந்தகனுமான ஒருஏழைப்பிராமணனிருந்தான். அவன் தினந்தோறும் இரண்டு மூன்று ஊர்களுக்குச்சென்று உபாதானம்வாங்கிவருவது வழக்கம். அவன்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்கள் ஏறக்குறைய 10-பேர் உண்டு. சம்பத்தில்லாதவனுக்கு சந்தானமிருப்பது சகஜமே. ஒருநாள் வெயில்வேளையில் இந்தக்கிழப்பிராமணன் கையிலுள்ள தடியைக்கொண்டு தட்டித்தடுமாறி உபாதானத்துக்காக போய்க்கொண்டிருந்தான் அக்காலத்தில் ஆகாசமார்க்கமாகப் பார்வதிபரமேசுவரர்கள் வந்துகொண்டிருந்தார்கள். உலகமாதாவான பார்வதி இந்தபிராமணனது கஷ்டத்தைக்கண்டு சுவாமியைநோக்கி இந்தகிராமத்தில் எத்தனையோ தனிகர்களிருக்கிறார்கள். அவர்களில் அநேகருக்கும் புத்திரர்களில்லை. அவர்களெல்லாம் தங்களுடைய ஆஸ்தியைத் தங்களுக்குப் பிற்காலம் அனுபவிக்கத்தகுந்தவர்கள் யாருமில்லையே என்னசெய்வோமென்று ஏங்கித்தவிக்கிறார்கள். இந்தப் பிராமணனுடைய குடும்பத்திலேயோ சுமார் 10-பேர்களிருக்கிறார்கள் ஆதலின் இவருக்கன்றோ தாங்கள் சம்பத்தைக் கொடுக்கவேண்டும். பசியில்லாதவனுக்குப் பரமான்னம் கொடுப்பதுபோல பிள்ளையில்லாதவனுக்குப் பெரும்பாக்கியத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். இவனை தரித்திரனுக்கியிருக்கிறீர்களே இதென்னநியாயமென்றாள். அதற்குப் பரமசிவன் அந்தப்பிராமணன் ஜன்மாந்திரத்தில்செய்த பாபத்தால் கண்ணிழந்து முஷ்டியெடுத்து ஜீவிக்கிறான் இவனுக்குநான் இப்போது திரவியங்கொடுத்தாலும் அதை இவன் அனுபவிக்கமுடியாது என்றார். பார்வதி சுவாமியைநோக்கி இப்படிச் சாக்குப்போக்கு சொல்லாதேயுங்கள் கொடுத்துப்பாருங்கள் அவன் அனுபவிக்கிறானு இல்லையா பார்ப்போம் என்றாள். உடனே பகவான் அவ்வந்தகன் செல்லும்வழிக்கப்பால் வலதுபுறத்தில் லக்ஷம்சவரன்கள்நிறைந்த பெரும்பையைப் போட்டார். அந்தவேளையில் குருட்டுக்கிழவன் தனக்குள் ஓர் யோசனைசெய்யலானான். விதியைவெல்ல யாரால்முடியும். கிழவன்சொல்லுகிறான்; நமக்கோ வயதாய்விட்டது. கண்தெரிகிறதால் காலால்வழிநடந்துபோகிறோம். இன்னும் சிலநாளைக்குள்முழுதும் பொட்டையாய் விட்டால் அப்போது நடந்துபோகமுடியுமா இந்தத்தடியைக்கொண்டு நடக்கமுடியுமாவென்று இப்போதே பரிக்ஷித்துப்பார்ப்போமென ஒருமுறை கண்ணை கெட்டியாக மூடிக்கொண்டு சற்றுதூரம்சென்றான். அதனால் பகவான்போட்ட சவரன்பை அவனது கண்ணுக்குத் தென்படாமற்போயிற்று. அக்காலத்தில் ஈசுவரன்சொல்லுகிறார். பார்வதி பார்த்தாயா பிராமணனது துர்ப்பாக்கியத்தை இப்போதுதானா இந்தக் குருட்டுப்பரிக்ஷை செய்யவேண்டும். இந்த அசட்டுஎண்ணம் தோன்றியது அவனது ஜன்மாந்திரபாபமல்லவாவென்றார். அதற்கு அம்பிகை கூறுகிறாள். நீங்கள்வழிக்கப்பால்போடாமல் நேராய்ப்போடுங்கள் என்றாள். சுவாமியும் அந்தமாதிரியேசெய்தார். அப்போது குருடன்நினைத்துக்கொள்ளுகிறான் ஆகா இந்தத்தடி எத்தனை உபயோகமாயிருக்கிறது. இப்போது கண்ணை மூடினவண்ணமாயே இந்தத் தடியைக்கொண்டு தட்டித்தட்டி நடந்து பார்ப்போமென்று கீழே ஒருதட்டுதட்டினான். அது சவரன்பையில்படவே அப்பாடா! பெரியகல்லொன்று வழியிலிருக்கிறது இந்தசனிதானே காலைக்காயப்படுத்துகிறதென்று எண்ணித் தன்காலால் எட்டி ஒருஉதை கொடுத்தான். அந்தப்பை சிதறி அப்பால்விழுந்தது. உடனே பார்வதி பரமசிவன்சொன்னது சரிதானென்று சும்மாவிருந்துவிட்டாள். அதுபோல் சொத்திருந்தும் அனுபவிக்கக் கொடுத்துவையாத தரித்திரர்களனேகர். எவ்வளவு புத்திமதிகளைச் சொன்னாலும் புத்திதிருந்தாத மூடர்கள் அநேகர். இதற்கெல்லாம் காரணம் ஜன்மாந்திரபாபம் என்பதில் தடையில்லை.

---

ஓர்காலத்தில் ஓரரசனுடைய சபையில் சிவன்பெரிதா, விஷ்ணுபெரிதா என்னும் சம்வாதமுண்டாயிற்று. இரண்டுகக்ஷியிலும் அநேகவித்வான்களிருந்ததால் கக்ஷியும் வாதமும்முற்றி வாய்ச்சண்டையிலிருந்து கைச்சண்டையாகும்போலிருந்தது. அப்போது அரசன் அவர்களைக்கையமர்த்தி அவ்வூரில் தவம்செய்துகொண்டிருந்த யோகியை வரவழைத்து 'சுவாமி, தாங்கள் இவர்களுடைய கக்ஷியையுணர்ந்து சிவன்பெரிதா, விஷ்ணுபெரிதா என்பதைச் சொல்லவேண்டும்' என்றான். அதற்குயோகி அப்பா, நான் சிவனையும் காணவில்லை விஷ்ணுவையும் பார்க்கவில்லை. ஆதலின் இன்னார்பெரியவரென்று சொல்லமுடியாதுஎன்றார். மற்றவர்களெல்லாம் வெட்கி அன்றுமுதல் தங்கள்கக்ஷியை விட்டுவிட்டார்கள்.

---

குருஉபதேசித்தபடி தவஞ்செய்த ஓர்சிஷன் பதினாலுவருஷம் யோகாப்பியாசங்கள்செய்து கடைசியாசத் தண்ணீர்மேல்நடக்கும் சக்தியைப்பெற்றான். உடனே குருவினிடம் ஓடிவந்து மகாராஜ் நான் இன்றைய

தினம் தண்ணீரில் அமிழாமல் நடக்கும் சக்தியை அடைந்துவிட்டேன் என்று வெகு களிப்புடன் சொன்னான். அதற்கு அவர் அடேமுட்டாள் நீ பதினாலுவருஷம்கழித்து கோரமானதபஸ்செய்து இந்த அற்பபலனைத்தானா அடைந்தாய் அதற்காகத்தானா இத்தனை ஆநந்தம் உனக்குண்டாயிற்று. அடே யாதொருதபஸுமில்லாமல் காலணாகொடுத்தால் படகின்மேலேறி தண்ணீரில்செல்லலாம். இந்த அற்பகாரியத்தை 14 - வருஷம் கழித்து நீ அடைந்தது எனக்கு மிகுந்த விசனமாயிருக்கிறதென்றார்.

---

“ஆற்றில்ஓடுகிற தண்ணீரை ஆபாகுடி அப்பாகுடி” யென்று உபசாரம்செய்வதுபோல் சிலர் தங்களுக்குச் சொந்தமல்லாத பொருள்களைப் பந்தயமாக வைக்கிறார்கள். ஒருசமயம் கோமுட்டிகளில் பிரவித்திபெற்ற ஒருதனவானுக்கும் வைதீகப்பிராமணரொருவருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று. வைதீகப் பிராமணர் கோமுட்டிகள் தங்கள் கிருத்யங்களை வேதோக்தமாகச்செய்வது கூடாதென்றார். கோமுட்டிபிரபு தம்மினத்தார் வைசியர்களாதலின் வேதாத்தியயனம் செய்யலாமென்றும் வேதோக்தமான கிருத்யங்களை நடத்தலாமென்றும் கக்ஷிபேசினார். இவ்விருவர்களின் வாதங்களைக் கேட்கவேண்டி பெரியசபையொன்று கூட்டப்பட்டது. அதில் கோமுட்டி தாம் தோற்றுப்போனால் வேதோக்தமான கர்மங்களை விட்டுவிடுவதாய்க் கூறினார். வைதீகப்பிராமணர் தாம் தோற்றுப்போனால் இவ்விந்தியாதேசத்தையே கோமுட்டிப்பிரபுவினிடம் கொடுத்துவிடுவதாய்க் கூறினார். கோமுட்டி ஐயா, பிராமணரே! இந்தியாதேசத்தை ஆங்கிலேயர்களன்றோ ஆளுகின்றனர். உமக்குச்சொந்தமென்று எப்படிச் சொல்லலாம் என்றார். அதற்கு வைதீகப்பிராமணர் வேதோக்தமான கர்மங்களை வேதியர்களாகிய பிராமணர்களன்றோ செய்யவேண்டும். அவர்களுக்கு அது சொந்தமாயிருக்க நீர் அதை உமக்குச் சொந்தம்போல் விட்டுவிடுவதாய்ப் பந்தயம்வைக்கிறீரே என்றார். கோமுட்டி பதில்சொல்லத் தெரியாமல் விழித்தார். சபையோர்கள் சம்வாதம் செய்ததுபோதும், ஜெயித்தவரின்னாரென்று தெரிந்துகொண்டோம் என்று கலைந்துபோனார்கள்.

---

“மணிப்பையன் என்றால் கழுத்தில் மணியைக் காணோம்” என்பதுபோல் ஒருசமயம் பகவான் ஸ்ரீபரமஹம்சர் தமது சிஷ்யர்களில் ஒருவனைநோக்கி, ஷர்பத்தை ஒருதொட்டியில்விட்டால் வெளியேயிருந்து ஈக்கள்மொய்க்கவரும், சிலஈக்கள் பாத்திரத்தின் ஓரத்திலிருந்து ஷர்பத்தைக்குடித்துச் சிலநேரம் ஆனந்தமடைந்து ஓடிப்போய் மறுபடியும் வருகின்றன. சில ஈக்கள் ஷர்பத்திலேயே விழுந்து உருண்டு புரண்டு முழுகிப் போகின்றன. அதுபோல், நீ சச்சிதானந்தமாகிய அமிர்தத்தின் கரைபோரத்தில் நின்று அதை அருந்தலாம். அல்லது அதில் முழுகிவிடலாம்” என்றார். அவர் வசனங்களைக்கேட்ட சிஷ்யன் ‘குருமகராஜ், நான் ஓரத்தில் இருந்து ஷர்பத்தையுண்ணும் ஈயைப்போலிருக்க விரும்புகிறேனேயன்றி அதில்விழுந்து உருண்டு புரண்டு அமிழ்ந்துபோகும் ஈயைப்போல் இருக்க விரும்பவில்லை’ யென்றான். குரு அந்தச்சிஷனைநோக்கி அடே முட்டாள், சச்சிதானந்தமாகிய அமிர்தம் என்றேனே, அமிர்தத்தையுண்டவனுக்கு மரணமேதென்றார்.

---

“சர்வம் பிரம்மமயம் ஜகத்” என்றபடி இவ்வுலகமெல்லாம் பிரம்மமயமாயிருக்கிறது. இதை உள்ளபடி உணர்ந்தவர்கள் சர்வப்பிராணிகளையும் பிரம்மமாய் நினைத்து ஸதாஈசுவரத்தியானம்செய்வார்கள். சாக்ஷாத் பரப்பிரம்மத்தை சிலர் சிவனாகவும் சிலர் விஷ்ணுவாகவும், சிலர் சக்தியாகவும் சிலர் கணபதியாகவும், சிலர் சுப்பிரமண்யனாகவும், இன்னும் சிலர் சூரியனாகவும், மற்றும் சிலர் மகம்மது, கிறிஸ்து, அருகனாகவும் பாவித்து ஸ்தோத்திரம் செய்கிறார்கள். இதில் ஓர் வேடிக்கையுண்டு. எல்லாமதஸ்தர்களும் கடவுளைக் குணாதீதனென்று கூறுகின்றனர். ஈசுவரனுடைய சொரூபத்தை இன்னதெனச்சொல்ல முடியாதென்றும், அவருடையகுணம் இவ்வளவென அளவிட்டுக் கூறமுடியாதென்றும் எல்லாரும் சொல்லுகிறார்கள். ஈசுவரனையறியாமல் அவருடைய குணங்களைத்தெரியாமல் வேதங்களெல்லாம் தேடுகின்றன. கற்பகோடிகாலங்களாக மகாயோகிகளும் தபஸிகளும் அருந்தவமிழைத்தும் சர்வேசுவரனுடைய தரிசனம் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். ஒருவனால் இன்ன உருவம்தான், இன்ன அளவுதான் இன்னமாதிரிதானென்று ஈசுவரன் கண்டறியப்படும் அவ்வளவு இலகுவானவராயிருந்தால் அவருக்கு ஸ்வாமித்தவமேது? நம்முடைய கணைக்கில் அகப்படாததெதுவோ, நம்முடைய மதிக்கு எட்டாததெதுவோ, நம்மால் இன்ன ரூபம்தானென்று நிர்ணயிக்கப்படாததெதுவோ அதுவே பரம்பொருள்.

பஞ்சோந்தி (Cameleon) பலநிறமாய்த் தோன்றுவதுபோல் பரப்பிரம்மம் சிலருக்கு சிவனாகவும், சிலருக்கு விஷ்ணுவாகவும், சிலருக்கு அல்லாவாகவும், சிலருக்கு இயேசுவாகவும், நாஸ்திகர்களுக்கு சுபாவமாகவும் காணப்படுகிறார். நம்முடைய மதாசாரியர்களெல்லாம் மகாபுத்திசாலிகள். சிறந்ததபஸித்தியையுடையவர்கள். அவர்கள் தத்தம்புத்திக்கு எட்டினவரையில் ஈசுவரனை ஒவ்வொருரூபமாயறிந்து ஆராதித்தனர். அவர்களின்வழியைப் பின்பற்றிச்செல்லும் நாம் அவர்

களுடைய மார்க்கத்தைப் அனுசரிக்கவேண்டும். ஆனால் அன்னிய ஆசாரியர்கள் தங்களுடைய புத்தியும யுக்தியும் இடங்கொடுக்குவரையில் ஈசுவரனை எவ்வெவ் விதமாய்ப் பாவித்தார்களோ அந்தப்பாவனையை இழு லாகாது நிந்திக்கலாகாது. ஒருஜில்லா கலெக்டர் டிஸ்திரிக்ட் மாஜிஸ்திரேட்டாயும், ரெவினியூ ஆபீஸராயும், தேசாந்திரம்போகும் பிரயாணிகளை சம்ரக்ஷிக்கிறவராயும், டிஸ்திரிக்ட்போர்டு பிரஸிடெண்டாகவு மிருப்பதுபோல் ஸர்வசக்தியுள்ள ஈசுவரன், சிவன், விஷ்ணு முதலிய பற்பலரூபங்களாக விளங்கி எல்லோரையும் கடாக்ஷிக்கின்றார். அவரை எவ்விதமாய் பூஜித்தாலும் நன்மையுண்டு. எந்தரூபத்தை நிந்தித்தாலும் தீமையுண்டு. சிவனைத்தான் போற்றவேண்டுமென்றும், விஷ்ணுவைத்தான் ஏற்றவேண்டுமென்றும் தேவியைத்தான் ஆராதிக்க வேண்டுமென்றும், சுப்ரமண்யத்தைத்தான் பிரார்த்திக்கவேண்டுமென்றும், ஏசுவை விசுவாசி, அல்லாவை வணங்கு என்றும் கூறுவதெல்லாம் அந்தந்த மதத்திலுள்ள அபிமானத்தின் காரியங்களேயன்றி வேறில்லை. ஆனால் மதவெறிகொண்டு சைவர்கள் விஷ்ணுவை துவேஷிப்பதும் வைஷ்ணவர்கள் சிவனை நிந்திப்பதும், ஒருசமயத்தார் மற்றொருசமயத்தாரின் கடவுளை ஏசுவதும், இகழ்ச்சியாய்ப்பேசுவதும் பாபமே. அப்படி இகழ்வதால் தங்கள் தெய்வத்தின் ரூபத்தையும் குணத்தையும் தாங்கள் அறிந்துவிட்டதாயன்றோ ஏற்படுகின்றது. அதனால் ஈசுவரன் ஸர்வவியாபி குணாதீதன் என்றசங்கதியைப் பொய்யாகத் தோன்றும்படிசெய்து விடுகிறார்கள். ஆதலின் மததூஷணைசெய்வது மிகுந்தபாபமென்பதை ஒவ்வொருவரும் அறிந்துகொள்வதவசியம்.

---

## பொருள்.

ஸ்ரீமத் தவளபதுமாசனியாய் விளங்கும் சரஸ்வதி தேவியின் பிரபாவதாரமாயெழுந்தருளிய நம்பெருமூதாட்டியாரது திருவாக்கினின்று மெழுந்த “பொருடனைப் போற்றிவாழ்” என்னு மிவ்வாக்கியத்திற்குச் சாதாரணமாய், பொருளைக்காப்பாற்றி வாழ்வீராக வென்பதே பொருளாக விளங்குகின்றது.

பொருளெனப் பொதுப்படக்கூறியவாற்றான் உள்பொருள், இல்பொருள், மெய்ப்பொருள், பொய்ப்பொருள், நித்தியப்பொருள், அநித்தியப்பொருள், காட்சிப்பொருள், கருத்துப்பொருள், இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள், இயங்கியற்பொருள், நிலையியற்பொருள், உருவப்பொருள், அருவப்பொருள் எனப் பலவாற்றானும் பகுத்துக் கூறப்படும் பொருள்களனைத்தினையுமோ யெடுத்துரைத்த தெனின், நமதன்னையார், பொருளென வொருமையிற்றொனெடுத்ததனோடு தான் என்னும் தன்மை ஒருமைப்பெயரின் விகாரமாகிய தன்னென்பதைப்புணர்த்தி நின்றாராதலின் அது தான்கொண்டதோர் பொருளே யென்பதையும், அப்பொருள் தன்னுள் தன்னின் மேம்பாடுடையதோர் பொருளைக் கொண்டு நிற்கின்றதென்பதையுங் குறித்து நின்றது.

ஆயினத்தகைப் பொருள் யாதோவெனின், இந்திரன்முதலிய விறையவா பதங்களும், அந்தமி லின்பத் தழிவில் வீடும், நெறியறிந் தெய்துதற்குரிய மாந்தர்க் குறுதியென வுயர்ந்தோரா னெடுக்கப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் புருடார்த்தங்களில், மறுமை யின்பமொன்றற்கே யுரியதாயும், சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமையதாயும், துறவறமாகிய காரணவகையாற் பெறப்படுவதாயுமமைந்த வீடுபேறொழிய நின்ற முப்பொருள்களுள்,

வடுவிலாவையத்து மன்னியமூன்றனுள், நடுவணதெய்த விருதலையுமெய்தும் “நடுவணதெய்தாதானெய் துமுலைப்பெய், தடுவதுபோலுர்துயர்” எனப்போந்த மேதாவியர் வசனப்படி முன்னும்பின்னுமாய் நின்ற வறமு மின்பமுமாகிய இருபொருளினையும் ஒருவனடைதற்கு இன்றியமையாச் சிறப்பினவாய், மத்யகததீபகாலங்காரம்வாய்ந்து நின்ற வொருபொருள்பொருளேயாம்.

அப்பொருள் மேற்கூறியபடி வேறு ஒருபொருளை தன்வயிற்படுத்த தெங்ஙனமெனின்,

“நாடியபொருள்கைக்கூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும் வேரியங்கமலைநோக்கு
நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகைச்
சூடியசிலையிராமன் றோள்வலிகூறுவோர்க்கே” என்னும்

அபியுக்தர் வசனத்தானும்,

“கேடில்விழுச்செல்வங் கல்வியொருவற்கு
மாடல்ல மற்றையவை”.
[ஞ்
“செல்வத்துட்செல்வஞ் செவிச்செல்வமச்செல்வ
செல்வத்துளெல்லாந் தலை”.

“கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு செல்வமும் செல்வமெனப்படும்” எனப்போந்த உத்தர வேதச் செய்யுண் முதலியவற்றானும், மேல்பொருளென்றது, கல்விப்பொருளெனவும், செல்வப்பொருளெனவு மிருவகைப்படுமென்றும், அவ்விரண்டனுள் கல்விப் பொருளே சிறந்ததென்பதூம், எனைச் செல்வப்பொருளோவெனின்,

“பழியஞ்சிப் பாத்தூணுடைத்தாயினில் வாழ்க்கை,
வழியஞ்சலெஞ்ஞான்றுமில்”.

"நட்பிடைவஞ்சஞ்செய்து நம்பினர்க்கூண்மாறாட்டத்
துட்படக்கவர்ந்துமேற்றோர்க் கிம்மியுமுதவாராயும்
வட்டியின்மிதப்பக்கூறி வாங்கியும்பிறர்போலீட்டப்
பட்டதோவறத்தாமீட்டு நம்பொருள்படுமோவென்னு".
என்ற மேதாவியர்வசனப்படி தருமவழியிற் பொருளைச் சம்பாதித்து, அத்தகைப்பொருளை

"இல்வாழ்வானென்பா னியல்புடையமூவர்க்கு
நல்லாற்றினின்றதுணை".

"துறந்தார்க்குந்துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வானென்பான்றுணை".

"தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கலுனென்றாங்
கைம்புலத்தாறோம்பறலை".

என்றபடிபிரமசரியர் முதலிய பதின்மருக்கும் பகிட்டுக்கொடுத்துத் தானுமோர்பாக முண்பவனிடத்துளதாஞ்செல்வமும் சிறப்பினதேயாம், இவற்றினுண்மையை

"அறனீனு மின்பமுமீனுந் திறனீனுந்
தீதின்றிவந்தபொருள்"

"ஒண்பொருள்காழ்ப்ப வியற்றியார்க்கெண்பொருள்
ஏனையிரண்டு மொருங்கு". என்னுந் திருக்குறளாற் றெள்ளிதி னுணர்க.

இத்தகைய பொருளை, போற்றிவாழெனக் கூறியதேன், அவ்வாறு போற்றுவதா லுண்டாம் பயன் என்னையோவெனின், மேற்கூறிய அறத்திற்கு மின்பத்திற்கும் நிமித்தமூலகாரணமாயும், வீடு பேற்றிற்குச் சாதாரண துணைக்காரணமாயும் விளங்குவதேயாம்.

மேல் அறமெனவெடுத்த தெதனையோ வெனின், ஒருவரானு மியற்றப்படாமலும், யாவர்திற்குந்தானே மூலப்ரமாணமாயும், தனக்கு வேறொரு மூலப்ரமாணமில்லாததாயும், அனுதியே சுயம்புவா யமைந்து கிடப்பனவாயும், சகல பூதாத்மகராய் விளங்கும் சர்வேஸ்வரனாற் றோற்றுவிக்கப்பட்டதாயும் விளங்கும், சுருதிகளானும், மனு, கஸ்யபர், கர்க்கர், வசிட்டர் முதலாயின பதிற் றெண்பதின்மரும் தனித்தனியே புகன்றுள்ளதான ஸ்மிருதிகளானும் எடுத்துக்கூறப்பட்ட தருமமேயாம். இனி அவ் அறத்தின்பொருளானதருமத்தின்வடிவம் யாதோவெனின், வேதவிதியையே லக்ஷணமாகக் கொண்டதே தருமமென்று, மீமாம்ஸகரும், வேதவிதியை ஆராய்ந்தடையத்தக்கவான்மகுணமேதருமமெனத் தார்க் கிகரும், முக்குற்றங்கடிந்த முனிவர்களும் மஹான்களும் நிதம் எதனை அநுஷ்டிக்கின்றனரோ வவ்வநுஷ்டானமே தருமத்தின் வடிவமெனக் கற்பித்திருக்கின்றனர்.

மேலும், அத்தருமமோ, ஆசாரம் ஒழுக்கம் விவகாரம் வழக்கு பிராயச்சித்தம் தண்டம் என மூவகைப்படும். அவற்றுள் ஆசாரமாவது அந்தணர்முதலிய வருணத்தார், தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று, அவ்வவற்றிற்கோதிய வறங்களில் வழுவா தொழுகுதல்;

விவகாரமாவது ஒருபொருளைத் தனித்தனியேஎனதெனதென்றிருப்பார், அதுகாரணமாகத் தம்முண்மாறுபட்டு அப்பொருண்மேற் செல்வது.

அது, கடன்கோடல், உபநிதி, கூடி மேம்படல், நல்கியதை நல்காமை, ஒப்பிப்பணி செய்யாமை, கூலி கொடாமை, உடையனல்லான் விற்றல், சொற்கொடுமைமுதலிய பதினெண் பிரிவினையுடையது.

பிராயச்சித்தமாவது, மேற்குறித்த வொழுக்கநெறியினும், வழக்குநெறியினும் வழுவினரை, மீட்டும் அந்நெறியி னிறுத்துதற்பொருட்டு குற்றத்தின் தாரதம்மியங்களையொப்ப வாராய்ந்து, அதற்குத் தகுமாறு தண்டித்தல்.

இவற்றுள், வழக்கும், தண்டமும், உலக நெறியை நிலைபெறச் செய்வதற்காவ தல்லது,ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயக்குந்தன்மை யுடையனவல்லவாதலானும், நூலுணர்ச்சி வேண்டாது, உணர்வு மிகுதியானும், தேயவியற்கையானும் அறியப்படலாந் தன்மை யுடையனவாதலானும் அவ்விரண்டினையு மொழித்து, இம்மைமறுமைச் சிறப்பினதாய ஒழுக்கத்தைப் பற்றிப் பேசப்புகின் விரியுமாதலின் இன்றியமையாச சிறப்பினதாய சிலவற்றைச்சுருக்கிக் கூறுவாம். ஒழுக்கமாவது, சாதாரண ஒழுக்கமெனவும், விசேஷ ஒழுக்கமெனவு மிருவகைப்படும்.

அவற்றுள் சாதாரண வொழுக்கமாவது, பிராமணன் க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் நால்வகை வருணத்தவரும் பேதமின்றிந்தேர்ந்துசெயற்பாலதாகிய பொதுத்தருமமாம், அவை, தானதருமங்களைச்செய்தலும், கற்புடை மனைவியோடிருந்து ஐம்பெரு வேள்விகளைஈடோறுந்தவறுதியற்றுதலும்தென்புலத்தார்க்குரிய பிதிர்க்கடன்களை யிறுத்தற்காஞ் சற்புத்திரரைப் பெறுதலும், பிறவுயிர்களினிடத்தருளுமன்பு முடையராதலும், மானுடயாகமாகிய செல்விருந்து வருவிருந்தினரை யின்முகத்துட னுபசரித்தலும், தனக்குப் பிறர்செய்த நன்மையை மறவாதிருத்தலும், பகை-நொதுமல், நட்பு, என்னு முத்திறத்தாரிடத்தும் ஒப்பநிற்கும் நடுநிலை யுடையராதலும், மெய் மொழி மனங்கள் தீயவழியில் ஒழுக விடாதடக்கி நிற்றலும், காமமயக்காற் பிறர்மனை விரும்பாமையும், பொறுமை, பொருமை, பிறர்பொருளை யபகரியாமை, பிறரில்லா

ளிடத்து அவரைப்பற்றி யிகழ்ந்துரையாமை, பாபகர்மங்களுக் கஞ்சிநடத்தல், உலகத்தாரோ டொத்து நடத்தல், யாசிப்பவர்க் கில்லையென்னாது கொடுத்தல், புகழுடையராதல், பொய்சொல்லா திருத்தல், கள்ளுண்ணு திருத்தல் முதலியனவுமாம்.

விசேஷ ஒழுக்கமாவது, நால்வகை வருணத்தவரும்தத்தமக்குவிதிக்கப்பட்டவைகளை யநுஷ்டித்தலும், விலக்கப்பட்ட கருமங்களை யறவே விடுத்தலுமாகியதருமங்களாம். அவருள் பிராமணன் வேதமோதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றலென்னும் அறுவகைத்தொழிலில் சிரத்தையுடையவனாய், நாடோறும் தேவதாபூஜை, அதிதிபூஜை, ஸ்நானம் சந்தியாவந்தனம், ஜபம், ஹோமம், வைஸ்வதேவம் முதலிய ஆறுகருமங்களையும் விடாதுசெய்தல, போஜன ஆபோஜனகிரியைகளில் வழுவாமை முதலியனவாம்.

க்ஷத்திரியன், ஆயுதபாணியாக நின்று துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்து, சத்துருக்களையடக்கி, குடிகளைப்பாதுகாத்து, தன்னிடத்தில் அன்புள்ளவராகச்செய்து செங்கோன் முறைமைதவறாது பூமி பரிபாலனஞ்செய்து வரலேயன்றி மற்றைய வருணத்தவர்களைத் தத்தங் கருமங்களிற் றவறாதொழுகச்செய்து, நிலைதவறினவர்களை முறைப்படி தண்டித்து, பிரஜைகளிடத்தில் ஆறிலொருகடமை யிறைகொண்டு, ஏழைகளையாதரித்து வரல்முதலியனவும் புரிதலாம்.

வைசியன், வட்டிவாங்கலாகிய லாபகருமம், ரத்தினங்களின் கிரயம், விக்கிரயம் முதலியனசெய்தல், பசு பரிபாலனம், தானம், யாகம், ஓதல், கிருஷி, தேவதாபூஜை, பிராமணபூஜை, முதலியனசெய்தலாம்.

சூத்திரன், பிராமணருக்கும் மூன்றுவருணத்தாருக்கும் பணிவிடைசெய்தல், உப்பு, தேன், எண்ணெய் தயிர், மோர், நெய், பால், முதலிய வியாபாரங்களைச் செய்தல், பசுக்களைரட்சித்தல், கிருஷி, சித்திரமெழுதல் வாத்தியமுழக்கல் முதலியனவாம்.

அப்பொருள் இன்பநுகர்ச்சிக்குக் காரணமாமாறு, இம்மையே பயப்பதாயும் ஒருகாலத்தொருபொருளான் ஐம்புல நுகர்தற் சிறப்புடைத்தாயதும், களவியல்,கற்பியலென்னுங் கைகோளுக்கிடனாய காமவின்பத்தினை நுகர்தற்குவேண்டும் உபகரணங்க ளனைத்திற்கும் பொருளேவேண்டி யிற்றலினென்க.

ஆகவே அம்மையார் திருவாக்கினின் றெழுந்த ''பொருடனைப்போற்றிவாழ்'' என்பதன் கருத்து, கல்விப்பொருள் செல்வப்பொருளைக் கைக்கொண்டுவாழ்தலே நலனென்றும், அக்கல்வியால அறிவும், அவ்வறிவால் நல்லொழுக்கமும், அவ்வொழுக்கத்தினால், சகலதர்மங்களும்நீதிநெறிகளுமுண்டாமென்பதும்பெறப்பட்டது.

இவ்வுண்மையையே திருவள்ளுவநாயனார் தமது தமிழ் மறையினும் ''அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க் கிவ்வுலகமில்லா தியாங்கு'' என்றதனால், பொருளுடையவர்க்கே இவ்வுலகத் தின்பங் கிடைக்குமென்பது சித்தம். இதுபற்றி யன்றோ மானிடராயினோர் பற்பலதுறைகளிற் புக்குப் பொருள் தேடுவாராயினர். வித்தியாப்பியாசம் வேளாண்முயற்சி வியர்பாரசாதனம், இராஜசேவை, இவையுள்ளிட்ட பற்பல வாற்றான் அப்பொருளை தேடுவ தியற்கையன்றோ. மாணவர்க்கு செம்மை நிலைகோணாது உள்ளன்புடன் வித்தியாப்பியாசம்புரிவித்தலினா லடையும்பொருளனைத்தும் புண்ணியத்தா லீட்டியதேயாம். அன்றியும், ''தொழுதூண்சுவையி னுழுதுணினிது'' என நம் பெருமூதாட்டியார் திருவாய்மலர்ந்தருளியவாறு உடற்கண் வியர்வையரும்பப் பணை திருத்திவித்தூன்றி யெருதழை முதலிய செப்நேத்திப் பக்குவத்தாழ்வின்றி சலசமர்த்தியுற வளர்த்தும் ''செல்லான் கிழவனிருப்பினிலம்புலந் தில்லாளி னூடிவிடும்'' என்ற திருக்குறளின்படி இடைவிடா தன்றன் றெருக்காலப்பணையைச்சுற்றி நோக்கிப் புழுவெட்டன் முதலிய சீர்கேட்டிற் கிடமின்றிப் பராமரித்து அங்ஙனம்விளைந்த விளைவைக் கொய்து களத்திற்பெய்து ''கற்றவைகளைந்து தூற்றிக் கூப்பியூர்க்காணித்தெய்வ, மற்றவர்க்கற்றவாநீந்தளவை கண்டாறிலொன்று, கொற்றவர்கடமைகொள்ளப் பண்டியிற் கொடுபோய் தென்னு, டுற்றவர் சுற்றந்தெய்வம் விருந்தினர்க் கூட்டியுண்பார்'' என்றபடி கற்றைகளாகிய வைக்கோலினின்றும் தானியமணிகளைக் களைந்து தூற்றிப் பொலிகளாக்குவித்து ஊர்க்காணித் தெய்வங்களுக்கும், வறுமையுற்றோர்க்கும், அறுதிசெய்த முறைமையினீந்து, பின்னரளவிட்டுத்தொகைப்படுத்தி ஆறிலொருகூற்றை அரையர்க் கிறைப்பொருளாகத் தந்து ஏனைய வைவகைக்கூற்றுக்களைப்'' படைப்புக் காலத்துப் பிரமனாற் படைக்கப்பட்ட வொருவகைக் கடவுட் சாதியாராயும், தென்றிசையை வசிக்குமிடனாகக் கொண்டவராயுமுள்ள பிதிருக்கும், குறித்து வந்தவரும் குறியாது வந்தவருமாய் விருவகை யதிதிகட்கும், வறுமையுற்ற வுறவினர்க்கும், தான் வழிபடு மிஷ்டதேவதைக்கும், ஆகிய விந்நால்வகையறங்களும், தானுமிரோடிருந்து செய்யவேண்டுதலின் தனக்குமாகப் பகிர்ந்து, அகவிலை குறையாது விற்றுச்சேர்க்கும்பொருளும் தருமத்தான்வந்த பொருளேயாம்.

(இன்னும்வரும்.)